Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 21 சனிக்கிழமை (08.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 08


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)



தமிழ்படம் பார்க்கவில்லை (12)



கொழும்பில் ஆடம்பர பஸ் சேவையில் (08)



அப்பிளின் தந்தை (11)



மீண்டும் காங்கேசனில் சீமெந்து (03)

## வரவுசெலவுத் திட்டம் நவம்பரில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத திட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் எதிர்வரும்.நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.


அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு மதிப்பீட்டு அறிக்கை எதிர்வரும் 18 ஆம் சமர்ப்பிக்கப்படும். 2012 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு 2220 பில்லியன் ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வருடத்திற்கான மூலதனச் செலவு 1111 பில்லியன் ரூபாவாகும். கடந்த வருடம் இது 938 பில்லியன் ரூபாவாக இருந்தது. அதேவேளை 2012 ஆம் வருடத்திற்கான உத்தேச வருமானம் 1115 பில்லியன் ரூபாவாகும். கிளர்ச்சி வீதத்தை 8 சதவீதமாக பேணுவதற்காக 2012 ஆம் ஆண்டுக்கான அரச முதலீடு 541 பில்லியன் ரூபாவிலிருந்து 553 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### — வடக்கு கிழக்கிற்கு —

# வரையறுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரம்



வடக்கு,கிழக்கு. மாகாணங்களுக்கு வரையறைக்குட்பட்ட பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பிலேயே ஹெகலிய ரம்புக்வெல மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது அமைச்சர் இதனை சுட்டிக் காட்டியுள்ளார்.

வட கிழக்கு மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென வேண்டுதல்களும் முன்மொழிவுகளும் இருந்து வந்த நிலையில் தற்போது அரசு அதனை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது என்ற செய்தியை பலரும் நல்ல சமிக்கையாக கருதுகின்றனர்.

இதே சந்திப்பில், அண்மையில் களனியில் அமைச்சர் மேர்வின் சில்வா நடந்து கொண்ட விதம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர கேள்வி எழுப்பியபோது பதிலளித்த அமைச்சர் தகுதியுடைய பிரதிநிதிகளை தெரிவுசெய்வது மக்களுடைய பொறுப்பு தெரிவித்துள்ளார்.

## மகிந்தவை தண்டிக்க மேற்குலக நாடுகள் சதி

### குற்றம் சாட்டுகிறது அரசாங்கம்

(கொழும்பு)

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத நடவடிக்கைகளை இல்லாமல் செய்து அழித்ததற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தண்டிப்பதற்கு சக்தி வாய்ந்த சில. மேற்குலக நாடுகள் சதி செய்துவருவதாக அரசாங்கம குற்றம் சாட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருந்தபோது போரை நிறுத்துமாறு இந்த நாடுகள் கொடுத்த அழுத்தங்களைப் புறக்கணித்ததாலேயே ஜனாதிபதியைத் தண்டிக்க மேற்குலக நாடுகள் முனைவதாக ஐ.ம.சு.மு. வின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் அரசாங்கம் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளவில்லை என்று கூறிய அமைச்சர் வெளியுலக சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம் என்றும் கூறியுள்ளார்.

## பொதுமக்கள் பாதுகாப்புக் குழு குடாநாட்டில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)




அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பொதுமக்கள் பாதுகாப்புக்குழு நேற்றையதினம அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம் பெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் பாதுகாப்புக் குழுவின் செயலாளராக அரச அதிபர் இமெல்டா சுகுமார், குழுவின் உறுப்பினர்களாக பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச சபைச் செயலர்ளர்கள், திணைககளத்தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில் பொதுமக்கள் பாதுகாப்புக் குழு ஒரு தேசிய அளவிலான ஏற்பாடு என்றும் இதன் மூலம் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடனான பேச்சிற்கு சர்வதேச அழுத்தமே காரணம்



(கல்முனை)

கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சை நடாத்துவதற்கு சர்வதேசத்தின் அழுத்தமே காரணம் என கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இறுதித் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கூட்டத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கம் இன்று வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோக பூர்வ ஒட்டோ வழங்க கேட்கிறார் ரணில்

தனக்கு உத்தியோகபூர்வ முச்சக்கர வாகனமொன்றை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார். தனக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் அடிக்கடி பழுதடைவதால் பெரும்பாலான நேரங்களில் அது க்ராஜிலேயே இருபபதாகவும் எனவே "உத்தியோக பூர்வ முச்சக்கர வாகனம்"- ஒன்றை தனக்கு வழங்குமாறும் அவர் கோரினார்.

தெற்கு நெடுஞ்சாலையில் தனது வாகனத்தை செலுத்திச் சென்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவரை அதிலிருந்து நீக்குவதற்கு பொலிஸார் முயறசித்ததாகவும் ரணில் கூறினார். பொலிஸ் வாகனங்கள் தவிர்ந்த வேறு வாகனங்களை செலுததுவதற்கு அப்பாதுகாப்பு உத்தியோகஸ்தர் அனுமதி பெற வேண்டும் என கூறப்பட்டதாகவும் ரணில் தெரிவித்தார்.

தனது பாதுகாப்பு உத்தி (15 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டுத்திட்டத்தை பெற்றவர்களுக்கு பணிகளை விரைந்து முடிக்கப் பணிப்பு

யாழ். மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவிலிருந்து வீடுத திட்டத்திற்காக கட்டம் 1 முதல் 5 வரை தெரிவுசெய்யப்பட்ட 13350 பயனாளிகளில் 1995 பேர் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டப் பணியை போதிய அளவு கால அவகாசம் வழங்கியும் இதுவரை பூர்த்திசெய்யவில்லை என நேர்ப் இன் பதில் திட்டப்பணிப்பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். இதுவரை வீட்டுத்திட்டத்தைப் பூர்த்தி செய்யாதவர்கள் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து அவர்களுக்கு உரிய மிகுதிப் (15 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சியில் வாள்வெட்டு ஒருவர் பலி மற்றவர் காயம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ் வாள்வெட்டுச் சம்பவத்தில் திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்ட தம்பிராசா சௌந்தரராசா (வயது- 50) என்பவரே உயிரிழந்தவராவா. தியாகராசா சாந்தி (வயது-49) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (45)

## நீதிமன்றச் செய்திகள்

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை 12 வர்த்தகர்களுக்கு தண்டம் விதிப்பு

கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள 12 வர்த்தக நிலையங்களில் 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தமைக்காக 24 ஆயிரம் ரூபா தண்டம் யாழ். மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்.மதுவரி பரிசோதகர்களால் குறித்த பகுதிகளில் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போதே குறித்த 12 வர்த்தகர்களையும் கைது செய்து நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரித்த மேலதிக நீதவான் பிரேம்சங்கர் 12 வர்த்த கர்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த உத்தரவிட்டார்.

தண்டம் செலுத்தத் தவறின் இரண்டு மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் கடுமையாக எச்சரிக்கை விடுத்தும் தீர்ப்பளித்தார்.

# வாகனச் சாரதிக்கு தண்டம் விதிப்பு

யாழ்.நகரப் பகுதியில் கவனயீனமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் வாகனத்தை செலுத்திய நபருக்கு யாழ்.நீதவான் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

யாழ்.பொலிஸாரினால் தொடரப்பட்ட இவ்வழக்கில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போதே வழக்கினை விசாரணை செய்த நீதவான் ஏ.ஆனந்தராஜா குற்றவாளிக்கு மேற்படி தண்டம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (எஸ்)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்

1) ஆதன இல : 54/14, 54/14பி, 59 சுவாமியார் வீதி , வட்டாரம் 08.
2) ஆதன இல : 27ஏ ஏ.வி.றோட், வட்டாரம் 08.
3) ஆதன இல : 12, 42, இலந்தைக்குளம் வீதி, வட்டாரம் 08.
4) ஆதன இல : 32, பழைய பூங்கா வீதி, வட்டாரம் 06.
5) ஆதன இல : 50, புது வீதி, கொய்யாத்தோட்டம், வட்டாரம் 06.

யாழ்ப்பாணம் வட்டாரம் 08இல் சுவாமியார் வீதி, ஏ.வி.றோட், இலந்தைக்குளம் வீதி, வட்டாரம் 06இல் பழைய பூங்கா வீதி, புது வீதி கொய்யாத்தோட்டம் என்பவற்றில் அமைந்துள்ள மேற்படி ஆதனங்கள் பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்ற வகையிலும் இருப்பதாக அயலவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, யாழ்ப்பாணம் மாநகர சபை 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இவ்வாதனங்கள் மீது எவராவது உரிமை கொண்டவராய் இருப்பின் 31.10.2011ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் ஆதனங்கள் மாநகர சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(C/988)

## பனை அபிவிருத்திச் சபை

PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

### விலைமனுக் கோரல் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

பனை அபிவிருத்திச் சபையின் கீழ்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை எமது தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள எமது தலைமையலுவலகத்தில் பெற்று 15.10. 2011 இற்கு முன்னர் தங்கள் கூறுவிலைகளை பதிவுத் தபால் மூலமோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- முல்லைத்தீவு, முள்ளியவளையில் உற்பத்தி நிலையத்துடன் கூடிய காரியாலயம் மற்றும் வேலி அமைத்தல்
- வவுனியா மாவட்டம் புளியங்குளத்தில் உற்பத்தி நிலையம் அமைத்தல்.
- ஊற்றுப்புலம், அறிவியல்நகர், மன்னார் - நறுவிலிக்குளம் ஆகியவற்றின் காணிகளுக்கு வேலி அமைத்தல்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகக் கட்டிடம் , யாழ்ப்பாணம்.

(C/588)

# இந்தியாவில் இருந்து திரும்பியவர்கள் பிரஜாவுரிமை பெற நடமாடும் சேவை

(வவுனியா)

அகதிகளாக இந்தியா சென்றவர்களுக்கு இந்தியாவில் குழந்தை பிறந்த நிலையில் மீள இலங்கை திரும்பி தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளவர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்கள், இலங்கை பிரஜாவுரிமையினை பெறுவதற்கான நடமாடும் சேவையினை இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழு எதிர்வரும் 15ஆம் திகதி வவுனியாவில் செயற்படுத்தவுள்ளது.

எனவே, பிரஜாவுரிமையினை பெறாதவர்கள் தமது ஆவணங்களை வவுனியா நீதிமன்ற கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடமாடும் சேவை இடம்பெறும் தினத்திற்கு முன்னராக ஒப்படைத்து தமது ஆவணங்களை சரிபார்த்துக்கொள்வதுடன் தமது தேவைகளை நடமாடும் சேவையின் போது நிறைவு செய்து கொள்வதனை இலகுபடுத்தி கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளனர்.

## ஆவணப்பட அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐ.டி.எம் மல்டி மீடியா யூனிட் அனுசரணையில் நெடுந்தீவு முகிலனின் குறும்படம் மற்றும் ஆவணப்பட அறிமுக விழா இன்று காலை 10.30 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள ஐ.டி.எம். யாழ்.நகரக் கிளையில் இடம்பெறவுள்ளது.

அகரம் பணிப்பாளர் தி.ஜனகன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகவும், கிழக்கு பதிப்பகத்துக்கான இலங்கை முகவர் ரீ.டி.மோகன் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினராக இலங்கை ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.ஸ்ரீ பிருந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (எப்.எஸ்)

# வடமாகாண சுகாதார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார வார நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ். ஆர்.ஜூட் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், சுகாதார சேவையின் சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், யாழ், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## மாட்டிறைச்சி மீட்பு

(மன்னார்)

மன்னார், சாவற்காட்டு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுக் காலை சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக அறுக்கப்பட்ட இரண்டு பசுக்களின் இறைச்சிகளை மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜீ. குணசீலன் தலைமையிலான பொது சுகாதார பரிசேதகர்கள் மீட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடுகள் அறுக்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலினை அடுத்து மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜீ.குணசீலன் தலைமையிலான் பொது சுகாதார பரிசோதகரகள் குழுவினர் குறித்த பகுதியில் உள்ள வீட்டில் சோதனையினை மேற்கொண்டனர்.

இதன்போது இரு பசுக்களின் இறைச்சிகளை மீட்டதோடு குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 3 பேருக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## இலவச கண் சத்திர சிகிச்சை முகாம்

(கிளிநொச்சி)

கெல்ப் எயிட் ஸ்ரீலங்காவானது முதியோருக்கான கண் சத்திர சிகிச்சை முகாமொன்றினை எதிர்வரும் 10ஆம் திகதி கிளி நொச்சி பொது வைத்தியசாலையில் நடத்தவுள்ளது.

எனவே, இம் முகாமில் சத்திர சிகிச்சை பெற விரும்புபவர்கள் அன்றையதினம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சென்று உதவிகளைப் பெறமுடியுமென்பதுடன வவுனியாவில் இருந்து செல்ல விரும்புபவர்கள் 10ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவிற்கு சமுகமளித்து அங்குள்ள கெல்ப் எயிட் நிறுவன தொண்டர்களுடன் தொடர்பு கொள்வதனூடாக போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

### முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2010/2011 கல்வியாண்டுக்கான அறிமுக நிகழ்வு 12.10.2011 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மற்றும் அனைத்து வருட மாணவர்களுக்குமான முதலாம், இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 24.10.2011 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்,
07.10.2011.

(C/587)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை

### பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும் பண்பாட்டு மரபுகளும்

**Philosopical and Cultural Traditions as Expounded in Periyapuranam**

பேருரை வழங்குனர் : பேராசிரியர் ம.வேதநாதன்
தலைவர், இந்துநாகரீகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 08.10.2011

நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்.

(C/589)

மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத்தால் பயன்என்ன? மாலைக்குழுதற்பொருள் மணமுள்ளமலர், அது போல பேச்சிற்கு முதற்பொருள் சுவையும், பயனுமுள்ள நல்லகருத்துக்கள். - அறிஞர் அண்ணா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வல்லரசுகளின் கைப்பாவை!

ஐக்கிய நாடுகள் சபை லிபியாவின் தற்காலிக அரசுக்கு அவசர அவசரமாக அங்கீகாரம் வழங்கி, அது மேற்கு நாடுகளின் கைப்பாவைதான் என்பதை மற்றுமொருமுறை நிரூபித்திருக்கிறது. இன்னும் பாலஸ்தீனத்துக்கு ஐ.நா. சபையின் உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்று தீர்மானிக்க முடியாத அல்லது தயங்கும் ஐ.நா. சபை, மேற்கு வல்லரசுகளின் ஆதரவு இருப்பதால் புதிய லிபிய அரசை ஏற்றுக்கொண்டுவிட்டது.

இது எதிர்பார்த்த ஒன்றுதான். லிபியாவின் உள்நாட்டுப் புரட்சி, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய மூன்று வல்லரசு நாடுகளினதும் தூண்டுதலின் பேரில்தான் அரங்கேறியது என்பது தெரிந்ததே. இந்த நாடுகளின் முழுமையான இராணுவ ஆதரவுடன்தான் லிபியாவில் கடா∴பிக்கு எதிரான மக்கள் எழுச்சி தூண்டப்பட்டது, வெற்றி பெற்றது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

லிபிய அரசின் இரும்புத் தலைவராக இருந்த முஅம்மர் கடா∴பிக்கும், புரட்சியாளர்களுக்கும் இடையில் கடந்த ஏழு மாதங்களாக நடந்துவந்த போர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. குறிப்பிட்ட வல்லரசு நாடுகளின் துணையுடன் புரட்சியாளர்கள் தலைநகர் திரிப்போலி உள்ளிட்ட பெருவாரியான பகுதிகளைக் கைப்பற்றி புதிய ஆட்சியையும் அமைத்துவிட்டனர்.

லிபியாவின் தேசிய தற்காலிக அரசு முஸ்தபா அப்தெல் ஜலீலின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. கடா∴பியும் அவரது ஆதரவாளர்களும் இப்போதும் மிகச்சில பகுதிகளைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடா∴பியின் கதி என்ன, அவர் எங்கே ஒளிந்திருக்கிறார் என்பது திட்டவட்டமாக இன்னும் தெரியவரவில்லை.

ஈராக்கில் நடந்தது போலவே லிபியாவிலும் நடந்தேறியது எண்ணெய்க்கான போர்தான். ஈராக்கில் அழிவாயுதங்கள் இருப்பதாகப் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து அமெரிக்கா நேரடியாகவே போரில் ஈடுபட்டது. இலட்சக்கணக்காக மக்கள் அழிவை நிகழ்த்தியது. அழிவுகள் இன்றும் தொடர்கின்றன. லிபியாவில் இந்த வல்லரசுக் கூட்டு நாடுகள் கடா∴பிக்கெதிராக மக்கள் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு, கடைசியில் நேரடியாகவே அங்கும் யுத்தத்தை நடத்தி முடித்திருக்கின்றன. எல்லாம் எண்ணெய்க்காக எவ்வளவு அந்நிய நாட்டு மக்களையும் அழிக்கலாம் என்ற திமிர்தான்.

பிரித்தானிய மற்றும் பிரான்ஸ் அரசுகள் லிபிய கிளர்ச்சியாளர்களுக்கு உதவியதில், பன்னாட்டு கச்சா எண்ணெய் நிறுவனங்களுக்கு இருந்த தொடர்பும் இப்போது ஒன்றன்பின் ஒன்றாக வெளிவரத் தொடங்கி இருக்கிறது. சமீபத்தில், மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான விட்டோலுக்கும், இங்கிலாந்தின் சர்வதேச இணையமைச்சர் அலன் டங்கனுக்கும் இடையே நடந்த சந்திப்புகள் “தி கார்டியன்” பத்திரிகையில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேபோல, பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் அலய்ன் ஜூப்பே, லிபியாவின் தற்காலிக அரசுடன் அந்நாட்டின் மொத்த எண்ணெய் உற்பத்தியில் 35 சதவிகிதத்தை பிரான்சுக்குத் தருவதற்கான இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பதாக “லிபரேஷன்” பத்திரிகை வெளிப்படுத்தி இருக்கிறது. அமெரிக்கப் பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள் கழுகைப்போல லிபியாவை வட்டமிடத் தொடங்கி இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் எழுதுகிறார்கள்.

கடா∴பியின் ஆட்சியில் ஷெல், பிப்பி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டு எண்ணெய்க் கிணறுகள் முழுவதும் லிபிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. இப்போது, மீண்டும் லிபியாவுக்குள் நுழையும் முயற்சியில் அந்த நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, லிபியப் புரட்சியாளர்களுக்கு உதவியதற்குப் பிரதிபலனாக பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகள் தங்கள் நாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு புதிய ஆட்சியாளர்கள் முன்னுரிமை தர வேண்டும் என்று வெளிப்படையாகவே கேட்க ஆரம்பித்திருக்கின்றன.

இவ்வாறாக, வல்லான் வகுப்பதே உலக நீதியாக இருக்கிறது. ஜனநாயகத்தின் காவலர்கள், மக்கள் நல அரசின் முன்மாதிரிகள், உலகுக்கு நாகரிகம் கற்றுத்தருபவர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு எண்ணெய் வேட்டையும், பிற நாட்டு உயிர்களைத் துச்சமாக வீசுதலுமாக நடக்கிறது உலக ரவுடியிஸம்! - ஆசிரியர்

# தேசிய சுகநலத்தினத்தை முன்னிட்டு 3 இடங்களில் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இரத்ததான நிகழ்வொன்றை நடத்த உள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதார கல்வி இணைப்பாளர் வி.எஸ்.பிரணவன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேவையறிந்து வழங்கும் குருதிக் கொடை பல உயிர்களையும் தக்க தருணத்தில் காப்பாற்றக்கூடிய தொரு உன்னதமான தர்மமாகும். இது பாதுகாப்பானது, உயிர் காப்பது, மற்றும் இலகுவானது, தற்சமயம் காயமடைந்து குருதியிழப்புடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்கள், சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்படும் நோயாளர்கள், கர்ப்பவதிகள்,புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அன்றாடம் குருதிக் கொடையாளர்கள் வழங்கும் குருதியினால் உயிர் காக்கப்படுபவர்கள் ஏராளம்.

இதற்கமைய நாளை ஞாயிற்றுக்கிழமை தேசிய சுகநல வாரத்தையொட்டி இரத்ததான நிகழ்வுகள் மூன்று இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பிரதேசங்களுக்குப் பொதுவாக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதாரா சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும், வடமராட்சியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை (மந்திகை) மற்றும் தென்மராட்சியில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் உயிர்காக்கும் உணர்வுள்ள சமூக நலன்விரும்பிகள், சுகாதாரப் பணிப்பாளர்கள், அரச,அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள், இளைஞரமைப்புகள், சமய, சமூக பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் என அனைவரையும் பங்குபற்றி குருதிக் கொடை வழங்க முன்வருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

(வடமராட்சி)

வெற்றிலைக்கேணி உணவத்தை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறுவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 14ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் ஆலய முன்றலில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு.லிங்கநாதன், மருதங்கேணி கலாசார உத்தியோகத்தர் கார்த்திகேயன் இராணுவ உயர் அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வி)

## கடமை நேரத்தில் ஆயுதம் பொலிஸாருக்கு அனுமதி

பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் ஆயுதங்களைப பயன்படுத்திக்கொள்ள முடியும் என பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார். பொலிஸார் கடமை நேரத்தில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு எவ்வித தடையும் விதிக்கப படமாட்டாது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் மா அதிபர்கள், மாவட்ட மற்றும் வலயங்களுக்குப் பொறுப்பான பொலிஸ அதிகாரிகள், அத்தியட்சகர்கள், தலைமைக் காரியாலய பரிசோதகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர் என அவர் தெரிவித்தார்.

## சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

30 வருடங்களாக மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்க திட்டங்கள் வகுத்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர் தயாசிறித திசேரா தெரிவித்துள்ளார்.

எந்த நிறுவனங்களுடனும் கூட்டு சேராது அரசாங்கமே இந்த சீமெந்து நிறுவனத்தை நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக 6 முதல் 7 பில்லியன் ரூபா வரை செலவாகும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில், 250 முதல் 500 மெற்றிக்தொன் சீமெந்தை உற்பத்தி செய்ய முடியும் எனவும் சீமெந்து தயாரிப்பதற்கான இயந்திரங்களை இறக்குமதி செய்யப்பட உள்ளன. சீமெந்து தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட உள்ள தால், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் எனவும் அமைச்சர் திசேரா குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவர் நாடகப் போட்டி

(முழங்காவில்)

பூநகரிக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் நாடகப் போட்டி ஒன்று நாளை மறுதினம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு செம்மன் குண்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பூநகரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நாடகப் போட்டியில் 10க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள். (112)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத்தலைவர் பேராசிரியர் ம.வேதநாதன் பெரியபுராணம் புலப்படுத்தும் தத்துவமும், பண்பாட்டு மரபுகளும் என்னும் விடயத்தில் நிகழ்த்தவுள்ளார்.

இந் நிகழ்வுக்கு ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளார்கள்

# வலை வீசி மீன் பிடிப்பதற்கு சம்மேளனம் நிபந்தனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை ஊர்காவற்றுறை வீதியில் கிழக்காகவும் மேற்காகவும் வீதியின் அருகே கடற்தொழிலிற்கு வலை போடுபவர்கள் வீதியின் கரையில் இருந்து 15 மீற்றருக்கு அப்பால் தான் வலை போடவேண்டும் என யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனம் நிபந்தனை விதித்துள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இந்த முறையினை குறித்த பகுதியில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பின்பற்ற வேண்டும் என சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி அன்று யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் காரியாலயத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட மீனவர்கள் சந்திப்பிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இவ் வீதியின் பாலங்களையோ போக்குகளையோ மறித்து வலை பாய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. குறித்த நிபந்தனைகளை மீறிய வலை போடும் கடற்தொழிலாள்களது வலைகள் அந்தந்தப் பகுதி கடற்தொழில் சங்கங்கள் மூலமாக பிடிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது. (பா)

# காந்திய சிந்தனைவேலைத்திட்டத்தில் இளைஞர்கள் பங்குகொள்ளவேண்டும்

## விரிவுரையாளர் சிவகரன்

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தின் விடிவுக்கு ஏற்ற வகையில் காந்தீய சிந்தனைகளை கிராம மட்டத்தில் மக்களிடையே முன்னெடுத்துச் செல்லவேண்டும். இந்த வேலைத் திட்டங்களில் பங்கெடுப்பதற்கு இளைய தலைமுறையினர் முன்வரவேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் இ. சிவகரன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்திய காந்தி ஜெயந்தி தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மனித வாழ்வியலின் பெறுமானங்களை அடைய காந்திய சிந்தனைகள் பெரிதும் உதவுகின்றது மகாத்மா காந்தியடிகள் எவ்வாறு இந்திய மக்களை சுதந்திரப்பாதையில் வழி நடத்திச்சென்றாரோ அவ்வாறே எமது மக்களின் விடிவுக்காய் அவர்களை வழிநடத்த காந்திய சிந்தனைகள் உதவும்.

இன்று எமது பிரதேசத்தில் மனித நேய சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்டு ஒழுக்கவிழுமியங்கள் அருகிக்கொண்டே போகின்றது. இந்தச் சூழ்நிலையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காந்தியச்சிந்தனைகள் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டும் ஒழுக்க விழுமியம் நிறைந்த சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்பும் பணியில் காந்தி சேவாசங்க உறுப்பினர்களுடன் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

எனக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் நல்லது நடக்கவேண்டும் என்ற மனநிலை எல்லோரிடமும் ஏற்படவேண்டும் என அவர் தெரிவித்தார். (10)

# அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் நடைபாதைக்கு இடையூறாக ஆடம்பரப் பொருட்கள் விற்பனைசெய்த நபருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றம் ஆயிரத்து 500ரூபா அபராதம் விரித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையிலே குறித்த நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குற்றவாளிக்கு ஆயிரத்து 500ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

(எஸ்.)

# மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

லண்டன் காரை நலன்புரிச்சங்கம் கனடா காரை கலாசார மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் காரைநகர் அபிவிருத்திச்சபை நடத்தும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற காரை நகர் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு காலநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு:

யாழ்ற்றன் கல்லூரி

சு.புயலிசை -178, சி.ரகுராமன் -165, சி.காருண்யன் -155, ச.லக்ஸன் -155, செ.நாகதீபா -154 தி.திலக்ஸி -153,

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்

இ.நிமல் -172, அ.யசிந்தா -165, பா.சிவதாஜினி -162, சோ.கிருத்திகா -158, சு.கோபிநாத் -154

மெய்கண்டான் வித்தியாலயம்

இ.ஜனனி -156

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

அ.பிரணவரூபன் - 155 புள்ளிகள்

வலந்தலை வடக்கு அ.த.க. பாடசாலை

கி.சிந்துயன் -161 புள்ளிகள், ஜெ.விதுர்சனா - 158 புள்ளிகள்.

ஊரி அ.மி.த.க.வித்தியாலயம்

சு.விதுர்ஸன் - 181. (10)




இலங்கை வங்கி குத்தகைக் கடன் திட்டத்தின் கீழ் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினால் சாவற்கட்டையைச் சேர்ந்த அன்னலிங்கம் சபேசன் என்பவருக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான புதிய டெல்டா கார் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சாவியை கிளை முகாமையாளர் க. இலட்சுமணசர்மா உரிமையாளரின் மகனிடம் வழங்குவதை காணலாம். (104)

# கூட்டுறவுக் கண்காட்சி கைதடியில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவு மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுக் கண்காட்சி இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அமைச்சின் அலுவலகம் அமைந்துள்ள கைதடியில் உள்ள வெளிவளவில் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. இக்கண்காட்சியில் சுன்னாகம் "ஜசுபி" பழரசத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்கள் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் "யாழ்கோ" உற்பத்திப் பொருட்கள், மீசாலையில் உள்ள பழமுதிர்ச்சோலை கூட்டுறவுச் சங்கத்தினரின் உற்பத்திப் பொருட்கள், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினதும், பண்டத்தரிப்பு பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தினதும் உற்பத்திப் பொருட்கள், வேலணை, அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கத்தின் மருத்துகளும் உற்பத்திப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்படுவதுடன், விற்பனையும் செய்யப்படவுள்ளன.

அத்துடன் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத் தயாரிப்புகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வடமாகாணத்தில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வுவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அதன் அபிவிருத்தியை முன்நகர்த்திச் செல்லும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சிகளில் முதன் மூன்று இடங்களைப் பெறும் சங்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கரையோர வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரையோரப் பகுதிகளில் உள்ள வீதிகளை புனரமைப்பதற்கு யாழ்.மாநகராட்சி மன்றம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாஷையூர்,கொழும்புத்துறை,நாவந்துறை போன்ற பகுதிகளில் உள்ள குறுக்கு மற்றும் சிறு வீதிகள் இவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

தற்போது இப்பகுதியில் உள்ள வீதிகள் போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு எவரும் சேதப்பட்டு காணப்படுகின்றன.

இவ் வீதிகளை தார் ஊற்றி மீள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. (வி)

## துப்புரவு செய்யப்படும் கழிவுநீர் ஓடும் வாய்க்கால்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வடிகால்வாயிலை துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கால்வாயில் படர்ந்து வளர்ந்து காணப்பட்ட புற்கள் மற்றும் செடிகள் என்பன பிடுங்கி அழிக்கப்பட்டன. யாழ். மாநகராட்சி மன்றத்தினரின் சுத்திகரிப்பு தொழிலாளர்களால் இந்தத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.

கால்வாயில் தேங்கிக் கிடந்த கழிவுகளும் அகற்றப்பட்டு கழிவு நீர் தடையின்றி ஒடுவதற்கு சீர்செய்யப்பட்டது.

(வி)

# ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட வடமாகாண அதிபர், ஆசிரியர்கள்

நேற்றைய தொடர்ச்சி

யாழ்.கல்வி வலயம்

திரு.க.ரவிச்சந்திரன் யாழ்.புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம், திரு.சு.சண்முககுமார் யாழ்.கோண்டாவில் இந்து ம.வி., திருமதி வ.பேரின்பநாதன் யாழ். இந்து மகளிர் பாடசாலை,திரு. அ.அகிலதாஸ் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.

வலிகாமம் வலயம்

திரு.அ.ஜெயக்குமார் யாழ்.சங்குவேலி அ.த.க.பாடசாலை, திரு. சு.சண்முககுலகுமாரன் யாழ்.தாவடி இந்து த.க.பாடசாலை,திருமதி சி.சுந்தரபாரதி யாழ்.மூளாய் சைவப்பிரகாச வித்தி, திரு.த.கனகராசா யாழ்.வயாவிளான் ம.ம.வி.

கிளிநொச்சி வலயம்

திருமதி. த.கனகசபை கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க.பாடசாலை, திரு.வ.ஜீவரட்ணம் கிளிநொச்சி பளை றோ.க.த.க. பாடசாலை,திரு. தி.வரதன் கிளிநொச்சி முருகானந்தா ம.வி. திரு.ச.பூலோகராசா கிளிநொச்சி தருமபுரம் ம.வி.

மடுக்கல்வி வலையம்

திருமதி ச.குணசீலன் மன்னார் அடம்பன் றோ.க.த.க. பாடசாலை, திருமதி ப.சிலுவேஸ்திரன் மன்னார் வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை, திருமதி ஏ.அஞ்சலா மன்னார் அடம்பன் ம.வி. திருமதி அ.அசந்தாக்குரூஸ் மன்னார் ஆண்டான்குளம் றோ.க.த.க.பாடசாலை, திருமதி ஏ.ஜே.டி.ஜீவநாதன் மன்னார், சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை,எஸ். அன்ரன் சில்வேஸ்ரர் மன்னார் கருங்கண்டல் றோ.க.த.க.பாடசாலை, திருமதி மே.அமலதாஸ் மன்னார் பெரியமுறிப்பு அ.த.க. பாடசாலை, திருமதி ஜி.மகேந்திரன் மன்னார் கருங்கண்டல் றோ.க.த.க. பாடசாலை, திருமதி ஜே.எஸ். ஜே.யுகிலா மன்னார் பெரியபண்டிவிரிச்சான் ம.வி., எஸ். மரியதாஸ் மன்னார் அடம்பன் றோ.க.த.க.பாடசாலை, ஜெரால்ட் அல்மேடா மன்னார் தட்சிணாமருதமடு அ.க.த.க.பாடசாலை, ஞா. அந்தோணிப்பிள்ளை மன்னார் ஆண்டாங்குளம் றோ.க.த.க.பாடசாலை, திருமதி ச.கிறிஸ்டி அன்ரன் மன்னார் பொன்தீவுக்கண்டல் றோ.க.த.க.பாடசாலை, ச.ஜெனின்சன் பச்சேக் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோ.க.த.க.பாடசாலை, செல்வி ஜே.கி.டிலானி மன்னார் தலைமன்னார் பியர் அ.த.க.பாடசாலை, செல்வி. சு.மெற்றில்டா மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, திருமதி தி.சி.கிறிஸ்ரின் குரூஸ் மன்னார் சிறுதோப்பு றோ.க.த.க. பாடசாலை,பே.பாக்கியநாதன் மன்னார் கற்கிடந்தகுளம் பியர் றோ.க.த.க. பாடசாலை, செ. செல்வரஞ்சன் மன்னார் தலைமன்னார் பியர் றோ.க.த.க.பாடசாலை, சு.சண்முகலிங்கம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி,

வவுனியா வடக்கு கல்விவலயம்

த.ஜெகதீசன்,திருமதி வ.கணேசலிங்கம், த.ரஞ்சன் வவுனியா ஒலுமடு அ.த.க. பாடசாலை, திருமதி இ.ஞானகலா, திருமதி ற.ஸ்ரீகௌரி, திருமதி ப.ஜெபகௌரி வவுனியா புதுக்குளம் ம.வி., ச.பாலச்சந்திரன் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், ச.சுபாஸ்கரன் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், தா. அமிர்தலிங்கம் வவுனியா புதுக்குளம் ம.வித்தியாலயம்.

வவுனியா தெற்கு கல்வி வலயம்

திருமதி ர. அருந்தவராஜா வவுனியா கிறிஸ்தவகுளம் அ.த.க.பாடசாலை, திரு.எ.அமஸ்ராஜ் வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உ.வித்தியாலயம், திருமதி. ஜெ.சி.அரியரட்ணம் வவுனியா இந்துக் கல்லூரி, திருமதி நி.மகேந்திரராஜா வவுனியா அல்.இக்பால் முஸ்லிம் வித்தியாலயம், திருமதி ஜீ.நடராஜா வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்,திருமதி ச.தர்மகுலசிங்கம் வவுனியா இலங்கைத் திருச்சபை ம.வி., திரு.க.தனபாலசிங்கம் வவுனியா பெரியகோமரசன்குளம் ம.வி.

# மாணவர்களுடைய சிறந்த கல்வியே கலாசாரத்தை மேம்படுத்த உதவும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா

(யாழ்ப்பாணம்)

சிறுவர்கள் தமது அடிப்படை உரிமையான கல்வியைத் தவறவிடாது, சரியான முறையில் உரிய காலத்தில் கற்றுக் கொள்வார்களானால் அவர்கள் எதிர் காலத்தில் நற்பிரஜைகளாக நாட்டின் தலைவர்களாக உருவாக முடியும் என வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அச்சுவேலி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் அச்சுவேலி பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்காலத்தில் கைத்தொலைபேசி உள்ளிட்ட தொடர்பு சாதனங்களின் வருகை மாணவ சமூகத்தை வெகுவாகப் பாதிக்கின்றது. மாணவர்கள் இதிலிருந்து விடுபட்டு கல்வியைச் சிறந்த முறையில் கற்க வேண்டுமானால் ஆசிரியர்களும் பெற்றோரும் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

கல்வியை எவ்வளவு சிறந்த முறையில் கற்கிறானோ அவன்தான் கலாசாரத்தையும் பின்பற்றுபவனாக விளங்குகிறான். அந்த வகையில் தமிழர், சிங்களவா, முஸ்லிம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் நல்ல கலாசாரத்தப் பின்பற்றுவதன் மூலமே சக்தி வாய்ந்த சிறுவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதற்குப் பாடசாலைச் சமூகமும் பெற்றோருமே உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்களுக்கென பிரிவுகள் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில், பெண்கள், சிறுவர்கள், தமக்கு அநீதி ஏற்படும் சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகளைப் பெண்கள் பெண் பொலிஸாரிடமும் தெரிவிக்கலாம்.

இந்நிகழ்வில் கோப்பாய், அச்சுவேலி, இளவாலை, நெல்லியடி பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள், 52 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி, கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அச்சுவேலி பொலிஸாரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களையும் பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவித்தார்.

# சுகாதார வாரத்தை முன்னிட்டு கன்னாதிட்டியில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை காலை தேசிய சுகாதார வாரத்தின் 2 ஆம் நாள் நிகழ்வாக யாழ்.கன்னாதிட்டி காளி கோவிலுக்கு அருகாமையில் சிரமதானப பணிகள் இடம்பெற்றன.

மாநகர சபை உத்தியோகத்தர்களும், ஜே/70 மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் இணைந்து சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

முதல்வரின் செயலாளர் கு.பற்குணராசா, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன், பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவநாதன், அப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாசன் ஆகியோர் இச்சிரமதானப் பணியினை ஆரம்பித்து வைத்தனர்.

# யாழில் தேங்கிக் கிடக்கும் தென்னிலங்கை கத்தரிக்காய்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து கூடுதலாக கத்தரிக்காய் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டதால் அவை சந்தை வாய்ப்பின்றித் தேங்குவதால் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தம்புள்ளையிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்தக் கத்தரிக்காய்கள் கிலோ 20 ரூபா முதல் 40 ரூபா வரை விற்கப்படுகின்றன.

சந்தை வாய்ப்பின்றி இந்தக் கத்தரிக்காய்கள் சந்தையில் தேங்குவதனால் அவை அழுகிப் பழுதடைவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதே சமயம் குடாநாட்டில் மரக்கறிச் சந்தைகளில் விலையும் ஓரளவு சீராகக் காணப்படுகின்றது. திருநெல்வேலிச் சந்தையின் நேற்யை நிலவரப்படி,

பயிற்றங்காய் கிலோ 80 ரூபா, வெண்டிக்காய் கிலோ 60 ரூபா, தக்காளிப்பழம் 50 ரூபா, பூசணிக்காய் கிலோ 40 ரூபா, மரவெள்ளி கிலோ 20 ரூபா, பச்சைமிளகாய் கிலோ 80 ரூபா, வெங்காயம் கிலோ 70 ரூபா, கீரை ஒரு பிடி 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (வி)

# இரவில் வெளிச்சம் பாய்ச்சி கடலட்டை பிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடல் நீரேரிப்பகுதியில் இரவில் ரோச் (TORCH) கொண்டு சென்று வெளிச்சம் பாய்ச்சி கடல் அட்டை பிடிப்பது முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட கடற்தொழில் சம்மேளனக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கணவாய்க்குக் குழைத் தொழில் செய்பவர்கள் வழிக்கல் வலைத் தொழில் செய்யுமிடங்களில் (அற்கொட்டியான், நைலோன், சூடைவலை) கணவாய் பிடிப்பதற்காக குழைபோடக்கூடாது இவர்கள் வலைத் தொழில் செய்யமுடியாத சந்தர்ப்பத்திலேயே குழை போட்டு தொழில்செய்யலாம் ஏற்கனவே வலைத் தொழில் செய்யுமிடங்களில் குழைபோட்டவர்கள் அங்கிருந்து அவற்றை அகற்ற வேண்டும் அவ்வாறு செய்யாதவிடத்து தண்டனைக்குள்ளாக்கப்படுவர் எனவும் குறித்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட மீன்பிடிச்சங்கம் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தடை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நடைமுறைக்குவருவதாக யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)

# "அமாவாசை நிலவு" வெளியீட்டு விழா

(தெல்லிப்பளை)

குரும்பையூர் தம்பித்துரை ஐங்கரனின் அமாவாசை நிலவு கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர் சட்டத்தரணி சு.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்,

வரவேற்புரையை பொறியியலாளர் சி.தயாபரனும், வெளியீட்டுரையை கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரையும் நிகழ்த்தவுள்ளனர். சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பொன்.பாலகுமார் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்ள, ஆய்வுரையை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி சுகளங்கள் நிகழ்த்துவார். (44)


# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அ.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர் திருமதி யமுனா நந்தகுமார் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பார். (12)



# பரமர் சங்கமம்

பத்திரிகைகள் போடுற எத்தினையோ விசயங்கள் நடைமுறையில் உண்மையிலே நடக்காது. எண்டால் அதுக்குப் பத்திரிகைக் காரர்களே பொறுப்பு இல்லை.

பத்திரிகைகளுக்கு அறிக்கைகளையும், செய்திகளையும் குடுத்துவிடுவினம். நடைமுறையில் அதைச் செயற்படுத்த மாட்டினம். அதுக்காக பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் எல்லாம் பொய்யாகி விடுமா? பொய்யளும் வரும் அவ்வளவுதான். உதாரணத்துக்கு சீனி விலை குறைக்கப்பட்டதெண்டு செய்தி வந்திருக்கும். 95 ரூபா கிலோ வித்த சீனி 65 ரூபா எண்டு பத்திரிகை போட்டிருக்கும். அதைப் பத்திரிகை போடுறதும் அரச நிர்வாக அலகால ஊடகங்களுக்கு அனுப்பப்பட் டிருக்கும் செய்திகளைத்தான்.

கடைக்குப் போனா சீனி 95 ரூபாதான் பேப்பரில போட்டிருக்கெண்டு கடைக்காரருக்குச் சொன்னா பேப்பர்க் கந்தோரில போய் வாங்குங்களென்பான். ஆனா, 95 ரூபா வித்த சீனி 100 ரூபா எண்டாலோ அதுக்குக் கூட எண்டாலோ பேப்பரிலோ அல்லது வானொலியில சொன்ன நிமிசத்தில இருந்தே அந்த விலை விக்கத் தொடங்கிவிடுவினம்.

முன்னதுக்குக் கடைக்காரர் சொல்லுற காரணம் அந்த மானியம் குறைக்கப்படுவதற்கு முன்பாகவே கொள்முதல் செய்தால் அதைக் குறைக்க முடியாதெண்டுதான். விலை கூடினால் மட்டும் உடனேயே இவர்களுக்கு இருந்த மொத்தப் பொருட்களுக்கும் எதிர்காலத்தில் கூடிய விலை போட்டா வாங்கப் போகிறார்கள்.

தனக்குத் தனக்கெண்டால் சுளகு படக்குப் படக்கெண்ணும் என் பது போலத்தான். உப்புடியெல்லாம் சம்பாதிச்சுக் கொண்டு அந்தப் பணத்தை பொருட்களைப் போகும் போது மேலுலகுக்குக் கடத்திக் கொண்டா போக முடியும்.

உப்புடித்தான் கொஞ்ச நாளைக்கு முன்னம் இலங்கைப் பணத்தின் பெறுமதியை அமெரிக்க டொலர் தரத்திற்கு எண்பது தசம் ஆறு வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று செய்தி வெளிவந்தது. ஆனா எங்கட நாட்டுக் காசின் பெறுமதி அதிகரித்துள்ளதாகப் படவில்லை. முன்னம் இருந்தது போலவே பிறநாட்டுப் பொருட்களை இஞ்சை கொள்வனவு செய்வதெண்டால் பறைக் கணக்கில காசு கொண்டு போக வேண்டிக் கிடக்கு.

அது மட்டுமே மிகக் கிட்டடியா ஒரு செய்தி வந்தது. பவுணின்ர விலை 11 ஆயிரத்தால் குறைஞ்சு போய்ச்சு எண்டு. அப்படியெண்டா உந்த நகைக் கடைக்காரறெல்லாம் பூட்டிப் போட்டேல்லோ ஓடி இருப்பாங்கள். நாலாயிரம் ரூபா வித்த பவுண் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமா கூடிக் கூடி 50 ஆயிரம் ரூபாவாக ஏற ஏற அவன்ர புளுகத் துக்குச் சொல்லவே வேணும்.

கன்னாதிட்டியைக் கடந்து வின்ஸர் சந்திக்கும் மேலால மின்சார நிலைய வீதியையும் எட்டிட்டுது நகைக்கடைகள். இதுகளுக்கும் அதாவது டொலருக்கும், பவுணுக்கும் பத்திரிகைக் கந்தோருகளைத்தான் முற்றுகையிடச் சொல்வார்களோ என்னவோ.....

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(08.10.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
**கர வருஷம்**
**புரட்டாதி 21 ஆம் நாள்.**

இராகுகாலம் 09.02–10.32, சுபநேரம் 03.02 –4.32,
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ: 11.09 வரை
திதி: துவாதசி பி.இ: 02–47 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணக்கஷ்டம், சகோதர வெறுப்பு, வாக்குவாதம், வீண் அலைச்சல், அவசர முழவு.

**ரிஷபம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், பிறர் கௌரவம், தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம்.

**மிதுனம் :–** பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, தொழில் முடக்கம், வீண் அலைச்சல், தேக சுகக் குறைவு.

**கடகம்:–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், வீண் அலைச்சல், தொழில் விருத்தி, உடற்சுகக் குறைவு.

**சிம்மம்:–**பணக்கஷ்டம், வீண் வாக்குவாதம், குடும்பத்தில் கவலை, தொழில் முடக்கம், தேக ஆரோக்கியம்.

**கன்னி :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தேக ஆரோக்கியம், வீண் சர்ச்சை, தேவையில்லாத பேச்சு.

**துலாம் :–** பணக்கஷ்டம், தொழில் முடக்கம், வீண் அலைச்சல், தேக சுகக் குறைவு, மருத்துச் செலவு.

**விருச்சிகம்–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், வீண் கவலை, தேக சுகம் பாதிப்பு, தொழில் வெற்றி.

**தனுசு:–** பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் சர்ச்சை, தொழில் முடக்கம், உடற்சுகம் பாதிப்பு.

**மகரம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தேகசுகம், மூத்தோர் ஆசி, உற்சாகம்.

**கும்பம் :–** பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேகசுகக் குறைவு, தொழில் முடக்கம், வீண் அலைச்சல்.

**மீனம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தொழில்வெற்றி, மனமகிழ்ச்சி, உடற்சுகவீனம்.

# சிமிக் வெற்றிக் கிண்ண ருவெண்ரி 20 காலிறுதிக்கு தகுதி பெற்றது நியூஸ்ரார்

(யாழ்ப்பாணம்)

படையினர் - பொதுமக்கள் நல்லுறவு சிமிக் வெற்றிக் கிண்ண ருவெண்ரி 20 கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நியூஸ்ரார் அணி தகுதிபெற்றுள்ளது.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து நடத்தும் படையினர் - பொதுமக்கள் நல்லுறவு சிமிக் வெற்றிக் கிண்ண ருவெண்ரி 20 கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் நியூஸ்ரார் அணியும், ஸ்ரான்லி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் 17, இளங்கோ, கஜீந்திரன் தலா 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதன், சுலோஸன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஸ்ரான்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் பரிதாபத் தோல்வி அடைந்தது. இதில் இனோஜன் 28, சுதர்ஸன் 15, மதன் 27, ரஜனிகாந் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திலீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் நியூஸ்ரார் அணி காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (07)

# இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகம் 30? V கழகத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிக் கூடைப்பந்தாட்ட அணிகள் பங்குகொள்கின்றன. (93)

(யாழ்ப்பாணம்)

படையினர் - பொதுமக்கள் நல்லுறவு சிமிக் வெற்றிக் கிண்ண ருவெண்ரி 20 தொடரின் இன்றைய தினம் இரண்டு போட்டிகள் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணியும், சென்றலைஸ் அணியை எதிர்த்து கடற்படை அணியும் மோதவுள்ளன.

(வவுனியா)

இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிமியர் லீக்கின் பிரிவு மூன்றுக்கான போட்டி ஒன்று இன்றைய தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஊரெழு றோயல அணியும், திருகோணமலை சென் அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன.

ஏற்கனவே, இரு அணிகளுக்குமிடையிலான இடம்பெற்ற இப் போட்டி போதிய வெளிச்சமின்மை காரணமாக கைவிடப்பட்டது. இந்நிலையில் இன்றையதினம் மீளவும் இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரச கரப்பந்து ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் இன்றைய தினம் ஆரம்பமாகவிருந்த 2011ஆம் ஆண்டுக்கான சிரச கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவிருந்த இப்போட்டித் தொடர் கழக மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் இடம்பெறவிருந்தது.

இப்போட்டித் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றைய தினம் ஆரம்பிக்க முடியாது போனதாகவும், இப்போட்டித் தொடர் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (93)

# யங்கமன்ஸ் கால்பந்துத் தொடர் நவிண்டில் கலைமதி அணி வெற்றி

(நெல்லியடி)

கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஒன்பது பேர் கொண்ட கால்பந்துத் தொடரின் போட்டி ஒன்றில் நவிண்டில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன், தினமுரசு நாளிதழின் ஊடக அனுரணையுடன் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்டு வரும் கால்பந்துத் தொடர் யங்கமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடந்த போட்டி ஒன்றில் நவிண்டில் கலைமதி அணியும், கொற்றாவத்தை சிவானந்தா அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை இன்றைய தினம் நடைபெறவுள்ள முக்கியமான காலிறுதிப் போட்டி ஒன்றில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து கலட்டி அணி மோதவுள்ளது.


இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணி என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பு நிறைந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (12)

**இளைஞர் விளையாட்டு விழாவின்போது**

# தேசிய மட்ட சாதனையை முறியடிக்கும் முதல் வீரருக்கு சிறப்புப் பரிசாக கார்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின்போது முதலாவது தேசிய மட்ட சாதனையை முறியடிக்கும் விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனைக்கு நவீன காரொன்று அன்பளிப்பாக வழங்கப்படும் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைவர் லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து நடத்தவுள்ள 23ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய சூழலில் விளையாட்டின் மூலமே அதிகளவான நாடுகள் வெளிக்கொணரப்படுகின்றன.

இதற்கு அந்நாடுகளில் உள்ள ஊக்குவிப்பும், போட்டியாளர்களின் விடா முயற்சியுமே இதற்குக் காரணம்.

இந்த வகையில் எமது இளைஞர், யுவதிகளை ஊக்குவிக்கும் வகையில் நாமும் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

விளையாட்டின் மூலமும் நாட்டை வெளிக்கொணர அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

இந்த வகையில் வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள 23ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் போது முதலாவது தேசிய மட்ட சாதனையை முறியடிக்கும் வீரர் அல்லது வீராங்கனைக்கு சிறப்புப் பரிசாக காரென்று அன்பளிப்பாக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# செயலக உத்தியோகத்தர்களுக்கான கிரிக்கெட், வலைப்பந்துத் தொடர்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்களுக்கான 'அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான கிரிக்கெட் மற்றும் வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும், இத்தொடரில் வெற்றி பெறும் அணிக்கு அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# மாவட்ட மட்ட கூடைப்பந்து யாழ். மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றலைஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெற ஏற்பாடகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தின் முன்னணி அணிகள் பங்குபற்றவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மின்னல் வேகக் கூடைப்பந்தாட்டத் தொடர் எனப் பெயரிடப்பட்டுள்ள இத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அணிக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களுடன் பணப் பரிசும் வழங்கப்படும் என்றும், போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போட்டித் தொடர் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அனுசரணையுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி. எச்சரிக்கை

(டுபாய்)

ஆகஸ்ட் மாதம் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் காலி மைதானத்தில். இடப்பட்ட ஆட்டக்களம் தரமற்றது என்றும் இனிமேல் இதுபோன்ற ஆடுகளத்தைத் தயாரிக்கக் கூடாது என்றும் ஐ.சி.சி., இலங்கை கிரிக்கெட் சபைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்ரேலியா அந்தப் போட்டியில் 125 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை வென்றாலும் ஆட்ட நடுவர் கிறிஸ் பிராட் அந்தப் போட்டி குறித்து தனது அறிக்கையை ஐ.சி.சி.யிடம் சமர்ப்பித்திருந்தார்.

மீண்டும் ஒரு முறை ஆடுகளம் பற்றி இது போன்ற புகார் எழுந்தால் அந்த ஆடுகளத்திற்கு சர்வதேச கிரிக்கெட்டை நடத்தும் அனுமதி ரத்துச் செய்யப்படும்.

அந்த ஆட்டத்தின் வீடியோவை பார்த்த டேவ் ரிச்சர்ட்சன் முதல் நாள் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திற்குள்ளேயே சுழற்பந்துகள் கடுமையாகத் திரும்பியதும், சில நேரங்களில் உருண்டும் சில நேரங்களில் திடீரென பந்துகள் எழும்பியும் மோசமாக இருந்தது என்று கூறினார்.

இது முதல் முறை எழுந்த புகார் என்பதால் காலி ஆடுகளம் பற்றி எச்சரிக்கை மட்டும் விடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காலி ஆடுகளத்திற்கு தடை வரும் என்ற நிலையில் எச்சரிக்கையுடன் இலங்கை கிரிக்கெட் சபை தப்பித்துக் கொண்டதாக சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ஆட்டநிர்ணயச் சதி வழக்கு

# உமர், கம்ரன், வஹாப் ரியாஸ் விசாரணையின்போது சிக்கினர்

(லண்டன்)

ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மேலும் மூன்று வீரர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உமர் அக்மல், கம்ரன் அக்மல், மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோரின் பெயர்களே வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்ட நிர்ணயம் தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.


பாகிஸ்தானின் முன்னாள் தலைவர் சல்மான் பட், பந்துவீச்சாளர்களான முஹமட் ஆமிர மற்றும் முஹமட் ஆசிப் ஆகியோர் மீது ஆட்ட நிர் ணயக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் லண்டன் நீதிமன்றில் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே புதிதாக மூன்று வீரர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசாரணையின் போது சல்மான்பட்டுக்கும், சூதாட்ட முகவர் மஸார் மஜீத்துக்கும் இடையே நடந்த பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்கள் வேண்டுமேன்ற நோ-பால் வீசிய வீடியோக் காட்சிகள் நீதிபதிக்குப் போட்டு காண்பிக்கப்பட்டது. சூதாட்ட முகவரிடம் சல்மான்பட் பேரம் நடத்தும் போது, குறிப்பிட்ட ஓவரில் ஓட்டங்கள் ஏதும் அடிக்காமல் மெய்டன் ஓவராக்கி விடுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த உரையாடலை நீதிபதி கவனமாகக் கருத்தில் எடுத்ததாகவும் லண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமையும் அது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய கடற்கரை விளையாட்டு இன்று முதல் அம்பாந்தோட்டையில்




(அம்பாந்தோட்டை)

இலங்கையில் நடைபெறவுள்ள முதலாவது தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டி இன்று தொடக்கம் 14 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை பீச் பார்க்கில் நடைபெறவுள்ளது.

தெற்காசிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய எட்டு நாடுகளில் இருந்தும் 400 இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் அம்பாந்தோட்டைக்கு வருகை தந்துள்ளனர்.

அம்பாந்தோட்டை நகரும் விளையாட்டு மைதானமும் தெற்காசிய நாடுகளின் தேசியக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் சாதிப்பதற்காக இலங்கை வீர, வீராங்கனைகள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜமைக்கா அணியில் கிறிஸ் கெய்ல்



மேற்கிந்தியத்தீவுகளின் கிறிஸ் கெய்ல் ஜமைக்கா பிராந்திய அணியில் இணைக்கப்பட்டுள்ளார். பிராந்திய அணிகளுக்கு இடையிலான போட்டிகளுக்காகவே, கெய்ல் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட பிரச்சினைகளை அடுத்து கிறிஸ் கெய்லுக்கு தேசிய அணியில் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இருப்பினும், அவர் தற்போது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக சம்பியன் லீக் கிரிக்கெட் தொடரில் விளையாடிவருகின்றமை குறப்பிடத்தக்கது.

# இந்தியாவில் தொடரை வெல்வதே எங்கள் அனைவரின் இலக்காகும்!

### இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் பிரஸ்னன்

(ஹைதராபாத்)

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்த வேண்டும் என்பது தான் எங்கள் அனைவரின் நோக்கம் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரஸ்னன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியை இங்கிலாந்தில் வீழ்த்தி விட்டோம். ஆனால் இந்திய மைதானத்தில் இவர்களை வீழ்த்துவது என்பது சாதரணமான விடயம் இல்லை. இங்குள்ள மைதானங்களும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமையாது. எனவே இத்தொடரை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு செயற்பட உள்ளேன்.

இதில் மிகவும் துல்லியமாக பந்து வீசினால் தான் சாதிக்க முடியும். இல்லையென்றால் சோகம் தான் மிஞ்சும். அனுபவ பந்து வீச்சாளர் புரொட், அண்டர்சன் இருவரும் இத்தொடரில் பங்கேற்காதது பின்னடைவு தான். இருந்தாலும் ஸ்டீபன் பின், டென்பர்க், கிறிஸ் வோகஸ் போன்ற இளம் பந்துவீச்சாளர்கள் அணியில் இருப்பதால், விரைவாக விக்கெட் வீழ்த்த முடியும் என நம்புகிறேன். மேலும் இது ஒரு புதுவித அனுபவமாக இருக்கும்.



இங்கிலாந்தில் எப்படி இந்திய அணியை வீழ்த்தினோமோ, அதே போன்று இங்கும் வெற்றி பெறுவோம் என்ற மனநிலையுடன் தான் போட்டியில் பங்கேற்க உள்ளோம்.

இந்திய அணியில் ஒரு சில முன்னணி வீரர்கள் இடம் பெறாமல் உள்ளனர். இதனால் இப்போட்டி எங்களுக்குச் சாதகமாக அமையும் எனக் கருதவில்லை. நாங்கள் எப்போதும் களநிலைக்கு ஏற்ற வகையிலேயே அணியைத் தயார் செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



யூரோ கிண்ணக் கால்பந்து (2012) தொடரின் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள மைதானத்தைக் காணலாம். இம்மைதானம் உக்ரைனில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலிறுதியுடன் வெளியேற்றம்

(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் மரின் சிலிக், இவான லுபிசிக் ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதிய லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி (இந்தியா) ஜோடி 2-6, 3-6 என்ற நேர் செட்களில் தோற்று வெளியேறியது.



இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாடும் தகுதியை பிளாவியா பென்னட்டா (இத்தாலி), ரட்வன்ஸ்கா (போலந்து), மரியா கிரிலென்கோ (ரஷ்யா), மோனிகா நிகுலெஸ்கு (ரோமானியா) ஆகியோர் பெற்றுள்ளனர்.

# காலிறுதியில் ரபேல் நடால்



(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒன்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிக்கு ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது காலிறுதிப் போட்டியில் முன்னணி வீரர் ரபேல் நடால் கனடாவின் மிலாஸ் ராவோனிக்குடன் மோதினார்.

இதில் நடால் 7-5, 6-3 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை மகிழ்ச்சி. இருப்பினும் இத்தொடரில் முதல் நிலை வீரரரான சேர்பியாவின் ஜோகோவிச் விளையாடாதது கவலை தரும் விடயம். எப்பொழுதுமே சவால் தரும் வீரர்களுடன் மோதுவதே சிறந்தது. இந்த வகையில் அவருடன் மோதுவதை சவாலாகக் கருதுகின்றேன் என வெற்றியின் பின்னர் நடால் தெரிவித்தார்.

# ஒலிம்பிக் சம்மேளனத்தின் விதி 45 நடைமுறைக்குச் சாத்தியமற்றவை

### சர்வதேச விளையாட்டுத்துறைத் தீர்ப்பாயம்

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அமைப்பின் விதி 45 செல்லாது என்றும், அதை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் சுவிட்சர்லாந்தை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச விளையாட்டுத்துறை தீர்ப்பாயம் கூறியுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் ஊக்க மருந்து பயன்படுத்தியது கண்டறியப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாக போட்டிகளில் பங்குபெற தடை விதிக்கப்பட்ட வீரர்கள் இந்தத் தடை முடிவுக்கு வந்த பின்னர் நடைபெறும் அடுத்த கோடை கால மற்றும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெற முடியாது என்று தற்போது செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குற்றத்துக்கு இரண்டு தண்டனை இருக்க முடியாது என்று லா ஷான் மெரிட் சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் வாதாடினார். அவருடன் இந்த வழக்கில் வாதியாக இடம்பெற்றிருந்த அமெரிக்க ஒலிம்பிக் சங்கம் உலக அளவில் ஊக்க மருந்துப் பயன்பாடுக்கு எதிரான அமைப்பான வாடாவால் வெளியிடப்பட்டுள்ள சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தடைவிதிகளை மீறுவதாக ஐ.ஓ.சி. யின் சட்டம் இருப்பதாக வாதாடியது.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட சர்வதேச விளையாட்டுத்துறை தீர்ப்பாயம் ஐ.ஓ.சி.யின் விதி 45 செல்லாது என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு குறித்து தாங்கள் ஆச்சரியமடைந்திருந்தாலும், தீர்ப்பை ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பதாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் கூறியுள்ளது.

ஆனாலும் வாடா அமைப்பின் மூலம் தாங்கள் ஒரு தடையை செயற்படுத்த முயற்சி செய்வோம் என சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் கூறியுள்ளது.

எனினும் வாடாவின் சட்டதிட்டங்களில் ஊக்கமருந்தைப் பயன்படுத்தி போட்டிகளில் வெற்றி பெறுபவர்களை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெறுவதைத் தடை செய்ய வழி இருக்குமாயின் அதைச் செயறபடுத்தலாம் எனவும் அந்தத் தீர்ப்பாயம் கூறியுள்ளது.

# ஐரோப்பிய யூனியனில் சனல் - 4 காட்சிப்படுத்த 3 மில்லியன் செலவழித்த புலி ஆதரவாளர்கள்

(கொழும்பு)

மூன்று அரசசார்பற்ற நிறுவனங்கள் (புலிகள் சார்பு) இணைந்து, எதிர்வரும் 12 ஆம் திகதி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் செனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட இலங்கையின் கொலைக்களம் வீடியோ ஆவணப் படத்தை திரையிடத் தீர்மானித்துள்ளன. இதற்கு இலங்கை அரசாங்கம் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, இண்டர் நேஷனல் கிரைசீஸ் குறுப், மனித உரிமை கண்காணிப்பகம் என்பன இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளன. செனல் 4 தொலைக்காட்சியின் விவரணப்படத்தை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் வெளியிடுவதற்காக ஐரோப்பாவில் உள்ள புலிகளின் வலையமைப்பு, குறித்த நிறுவனங்களுக்கு மூன்று மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆவணப்படம் திரையிடப்பட்ட பின்னர், கலந்துரையாடல்களை நடத்துவதற்கு, செனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர் கெலம் மெக்ரே, கிறீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மூவர், பல அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் முதல் முறையாக செனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் விவரணப்படம் திரையிடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரகசியங்களை வழங்கிய 300 இலங்கையர்கள் விக்கி லீக்ஸை ஆதாரம் காட்டும் திவயின

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படையினர் தொடர்பாக புலனாய்வுத் தகவல்களை திரட்டிய சம்பவங்களுடன் 300 இலங்கையர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நபர்கள் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இலங்கைக்கு எதிராக போர் குற்றங்களை சுமத்துவதற்கு தேவையான பொய்யான தகவல்களை இந்த நபர்களே வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது என திவயின தெரிவித்துள்ளது. மேற்படி 300 பேர் அடங்கிய இந்தக் குழுவினர், செய்மதி, தொலைபேசி மூலம் நோர்வே தூதுவர் ஒருவருக்கு இந்த தகவல்களை வழங்கியுள்ளனர். அமெரிக்காவின் இரகசிய ஆவணங்கள் மூலம் இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளதாகவும் திவயின கூறியுள்ளது.


## படைப் பயிற்சி முகாமில் மாணவி உயிரிழப்பு

(கொழும்பு)

ரன்தம்பே மாணவர் படைப் பயிற்சி முகாமில் பயிற்சியில் கலந்துகொண்ட மாணவியொருவர் உயிரிழந்துள்ளார். பொல்கஹவெல, இரத்மல்தொட்ட மத்தியக் கல்லூரியைச் சேர்ந்த 25 வயது மாணவியே உயிரிழந்தவராவார். கடந்த புதன் கிழமை பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போது சுகயீனமுற்றுள்ளதாக தெரிவித்து குறித்த மாணவி ஓய்வு பெற்றுக்கொண்டார். இரவு உணவு உட்கொண்டதன் பின்னர் நித்திரைக்குச் சென்ற மாணவி மறுநாள் விழித்தெழாததன் காரணமாக அம்பகஹபெலஸ்ஸ வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் முன்னரே மாணவி உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஹசலக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாரிய பொருளாதார நெருக்கடி இலங்கையில் ஏற்படும் அபாயம்

## எச்சரிக்கிறது ஐ.தே.க.



விமான நிலையங்களை நிர்மாணம் செய்வதாக விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ், அயர்லாந்து மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலமையைப் போன்றதொரு நெருக்கடி இலங்கையிலும் ஏற்படலாம் என தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் சரியான முறையில் நிர்வாகம் செய்யப்படாவிட்டால் மோசமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அவ்வாறான ஓர் நிலைமை ஏற்பட வேண்டும் என தமது கட்சி விரும்பவில்லை என்ற போதிலும், நிர்வாக முறைகேடுகளினால் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படக் கூடும். புதிய விமான நிலையங்களை நிர்மாணம் செய்வதாக விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு வெறும் தேர்தல் வாக்குறுதிகளாகும்.

மக்களின் அதிருப்தியே சட்டம், ஒழுங்கு சீர் குலைவ தற்கு ஏதுவாக அமைகின்றது மொரட்டுவை மற்றும் தொம்பே பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் இதனையே வெளிப்படுத்துகின்றன.

சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறும் என்பது வெறும் கனவாக மாற்றமடைந்துள்ளன. தேர்தல் காலத்தில் அரச சொத்துக்கள் பயன்பாடு தொடர்பில் தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்கள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச சொத்துக்கள் மிகவும் மோசமான முறையில் துஸ்பிரயோகம் செய்ப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் நவீன ஆடம்பர பஸ்கள்



(கொழும்பு)

நாட்டின் போக்குவரத்துத்துறை தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காகவும் கொழும்பு நகரில் போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காகவும் இரு புதிய ஆடம்பர பஸ்களை இரு வாரங்களில் சேவையில் அறிமுகப்படுத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளது.

சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தக்கூடிய குறைந்த உயரத்திலான தரைப்பகுதியைக் கொண்ட இரு அசோக் லேலண்ட் பஸ்கள் மொரட்டுவை - புறக்கோட்டை வீதியில் இயங்கவுள்ளதாகவும் அடுத்த வருடம் இத்தகைய மேலும் 100 பஸ்கள் சேவையில் இணைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த பஸ்களுக்கான கட்டணம் சாதாரண பஸ் கட்டணங்களைவிட 3 மடங்காக இருக்கும்.

15 மில்லியன் 'ரூபா பெறுமதியான இந்த பஸ்களின் அடிப்பகுதியின் உயரத்தை மாற்றிக்கொள்ள முடியும் என்பதால் வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் பயன்படுத்தக்கூடிய வகையிலானதாக இருக்கும் என லங்கா அசோக் லேலண்ட் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி உமேஷ் கௌதம் கூறினார். இந்த பஸ்கள் பஸ் உரிமையாளர்களால் இயக்கப்பட்டாலும் அவற்றின் பராமரிப்புச் செலவு லங்கா அசோக் லேலண்ட் கம்பனியால் பொறுப்பேற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபையால் பயன்படுத்தப்படும் பஸ்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பஸ்கள் 30 வருடங்களுக்கு மேல் இயங்குவதாகவும் அவை மாற்றப்பட வேண்டும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கூறினார்.

# முன்னாள் பதவியை பாவித்து கொள்ளையில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

பத்தரமுல்ல பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றில் பணம் பெற்றுக்கொண்ட முன்னாள் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட குறித்து சந்தேகநபர் பொலிஸ் திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

# தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தேகம்



(கொழும்பு)

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கக் கூடிய கருவித் தொகுதியொன்றை அரசாங்கமோ அல்லது வேறு தனியார் துறையினரோ கொள்வனவு செய்துள்ளனரா என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கேள்வி எழுப்பினார்.

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கக் கூடிய வகையிலான கருவிகள் எதனையும் அரசாங்கமோ அல்லது தனியார் துறையினரோ தருவிக்கவில்லை என அமைச்சர் பதிலளித்தார். மேலும் இலங்கை தொலைத்தொடர்பு வலையமைப்பில் காணப்படும் தொலைபேசி சேவைகளின் மூலம் உரையாடல்களை மேற்கொள்வோரின் தகவல் பரிமாற்றம் ஒட்டுக் கேட்கப்படவில்லை. அமைச்சர்களின் உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை. அதற்கான தேவைகள் எதுவும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

# பிச்சைக்காரர்கள் கொல்லப்படுவது அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகர்ப்புறப்பகுதிகளில் பிச்சை எடுத்தலில் ஈடுபடுகின்ற பிச்சைக் காரர்கள் கொலைசெய்யப்படும் எண்ணிக்கையானது கடந்த சில மாதங்களில் அதிகரித்துள்ளதை தாம் அவதானித்துள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தனது மனுவில் தெரிவித்துள்ளது.


கம்பகா மாவட்டத்திலுள்ள களனியா என்ற இடத்தில் ஒக்டோபர் 04, 2011 அதிகாலை வேளையில் கூரிய ஆயுதம் ஒன்றால் இனந்தெரியாத நபரால் பிச்சைக்காரர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக ஆசிய மனித உரிமைகள் ஆணையகத்திற்குக் கிடைக்கப்பெற்ற தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் இலங்கையில் கொல்லப்பட்ட பிச்சைக்காரர்களில் இவர் எட்டாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது. நவீனமயமாக்கப்பட்ட, அழகான நகரங்கள் என அழைக்கப்படுகின்ற போதிலும், கொழும்பு நகரில் கடந்த ஆண்டில் இதே போன்று ஒரு டசின் வரையான பிச்சைக் காரர்கள் கொல்லப்பட்டதாக ஆணையகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் நீதியானது மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பொலிஸாரால் கொல்லப்படுகின்றவர்களின் நீண்ட பட்டியலும் மனித உரிமைகள் ஆணையகத்திடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறான படுகொலைகளில் ஈடுபடுகின்ற இனந்தெரியாதவர்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும், இவ்வாறு இனங்காணப்படுபவர்கள் நாட்டில் அமுலில் உள்ள குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணையகமானது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளது.

## கணினி மூலை

# வந்தது விண்டோஸ் 8



கம்ப்யூட்டர் வரலாற்றில், இனி புதிய திருப்பு முனையைக் கொண்டு வரும் என எதிர்பார்த்த விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டம், சென்ற செப்டம்பர் 13 அன்று, புரோகிராம் வடிவமைப்பவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஐகான்களுக்குப் பதிலாக ஓடுகள் வடிவிலான கட்டங்கள், மவுஸ் கிளிக் இடத்தில் விரல் தொடுதல், மெனுக்கள் போல்டர்கள் என்று அடுக்கடுக்கான குகைக் கட்டங்களுக்குப் பதிலாக, பொருள் புதைந்த பெரிதாக்கும் வசதி எனப் பல புதிய சிறப்பம்சங்கள், பயனாளர்களைப் புதிய உலகிற்கு அறிமுகப்படுத்தும் வகையில் உள்ளன. மைக்ரோசொப்ட் தளத்தில் யார் வேண்டுமானாலும் இதனைப் பதிவிறக்கி, சோதனை செய்து பார்த்திடலாம்.

இதில் பல சிறப்பு அம்சங்கள் அறிமுகமாகியுள்ளன. அவை பயனாளர்களுக்கு புதிய வசதிகளைத் தருவனவாக மட்டுமில்லாமல், தொழில்நுட்ப வல்லுநர்களைப் புதிய வழிமுறைகளுக்கு அழைத்துச் செல்வதாகவும் உள்ளன.

முதலாவதாக, இன்டெல் மற்றும் ஏ.ஆர்.எம். என இரண்டு நிறுவன சிப்களிலும் விண்டோஸ் 8 இயங்கும். இதன் மூலம் இந்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் பெர்சனல் கம்ப்யூட்டர் மற்றும் லப்டொப் கம்ப்யூட்டரில் மட்டுமின்றி, ஐ-பேட் வகை டேப்ளட் பிசிக்களிலும் பயன்படுத்தலாம். இது ஸ்மார்ட் போன்களில் இயங்காது. ஆனால் விண்டோஸ் 7 போனில் இயங்கும்.

விண்டோஸ் 8 சிஸ்டத்தின் கட்டமைப்பில் வடிவமைக்கப்படும் புதிய புரோகிராம்கள் மட்டுமின்றி, ஏற்கனவே விண்டோஸ் சிஸ்டத்தில் இயங்கி வந்த புரோகிராம்களையும், விண்டோஸ் 8 இயக்கும்.

இதனுடைய பயனாளர் முகப்பு முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஐகான்கள் நிறைந்த திரைக்குப் பதிலாக, ஓடுகள் பதிக்கப்பட்ட ஒரு சுவராக திரை காட்டப்படும். ஒவ்வொரு கட்டத்திலும் live data, application screens, communications screens போன்றவை இருக்கும். இவற்றின் மீது தொட்டாலோ, கிளிக் செய்தாலோ, அவற்றிற்கான திரை மேலும் விரிந்து அப்ளிகேஷன்களைக் காட்டிப் பயனாளரை அழைக்கும். தொடுதிரை வழி உள்ளீடு செய்திடும் வகையில் இது உள்ளது என்றாலும், வழக்கம் போல கீ போர்ட் மற்றும் மவுஸ் வழியிலும் இதனை இயக்கலாம். அத்துடன் wi-fi, 3G Net work, Printing ஆகியன ஒன்றோடொன்று இணைந்து இயக்கப்படும். ஸ்டோரேஜ், விண்டோஸ் லைவ் க்ளவுட் சேவை ஆகியனவும் இணைந்து இயங்கும்.

விண்டோஸ் 7 சிஸ்டம் 404 எம்பி இடத்தை ராம் மெமரியில் எடுத்தது. ஆனால் விண்டோஸ் 8, 281 எம்பி இடத்தையே கொண்டுள்ளது.

இதுவரை எச்.டி.எம்.எல். தொழில்நுட்பம் கொண்டிராத இன்டர்நெட் எக்ஸ்புளோரர், விண்டோஸ் 8 இல், அதனையும் கொண்டிருக்கும்.

விண்டோஸ் 8 சிஸ்டம் 256 டெரா பைட் அளவுள்ள ஷார்ட் டிஸ்க் வரை சப்போர்ட் செய்திடும். மின்சக்தியை மிச்சப்படுத்த பல வழிகள் தரப்பட்டுள்ளன. வீடியோ கொன்பரன்சிங் வசதிக்கென கேமரா இதில் பதிக்கப்பட்டு இயங்கும்.

ஓடுகளால் ஆன இந்தக் கட்டங்கள், ஐகான்களைக் காட்டிலும் அதிக தகவல் தருபவையாக இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் அது சார்ந்த புரோகிராம்களின் தகவல்கள் அப்டேட் செய்யப்பட்டு கிடைக்கும். எடுத்துக்காட்டாக, சீதோஷ்ண நிலை குறித்த அப்ளிகேஷன் அப்போது என்ன தட்ப வெப்ப நிலை என்று காட்டும். இமெயில் புரோகிராம் உள்ள கட்டம் எத்தனை இமெயில்கள் புதியதாய் உள்ளன என்று சொல்லும். நம் பயன்பாட்டிற்கு ஏற்றபடி இந்த கட்டங்களை இழுத்துப் போட்டு இணைக்கலாம். எடுத்துக்காட்டாக, நாம் அடிக்கடி பயன்படுத்தும் அப்ளிகேஷன் புரோகிராம்களை ஒரு குழுவாக அமைக்கலாம்.

சமுதாய உறவு தரும் தளங்களை இணைக்கலாம் கேம்ஸ் மட்டும் ஒரு கட்டத்தில் கொண்டு வரலாம். இதனாலேயே, இந்தக் கட்டங்களை விரித்துப் பார்ப்பதை மைக்ரோசாப்ட் semantic zooming என அழைக்கிறது. எந்த அப்ளிகேஷன் எங்கு உள்ளது என்பது மறந்து போனால், search மூலம் தேடி அறியலாம்.

விண்டோஸ் 8 சிஸ்டம் இயங்கத் தொடங்கியவுடன் கிடைக்கும் திரையில், அப்போதைய நேரம், திகதி, தனிநபர் தகவல்கள், புதிய இமெயில் எண்ணிக்கை, செயற்படுத்த வேண்டிய அடுத்த வேலை எனப் பல தகவல்கள் காட்டப்படுகின்றன.

வழக்கம்போல பாஸ்வேர்ட், எண்களால் ஆன தனி நபருக்கான எண் தொகுதி, படமாக அமைந்த பாஸ்வேர்ட் எனப் பல வழிகள் உள்ளன. பட பாஸ்வேர்ட் எனில், அறிந்த படம் ஒன்று புள்ளிகளால் தரப்பட்டு, பயனாளர் இணைப்பதற்குக் காத்திருக்கிறது. தங்கள் விரல்களால் இவற்றைச் சரியாக இணைத்தாலே, கம்ப்யூட்டரை இயக்க வழி கிடைக்கிறது.

இதன் Office தொகுப்பிலும் நிறைய கூடுதல் வசதிகள் உள்ளன. குறிப்பாக விண்டோஸ் எக்ஸ்புளோரரில், மெனு மாற்றி மெனு செல்லாமல், பைல்களைத் தேடிப் பெற முடியும்.

புதிய பி.டி.எப். ரீடர் ஒன்று "Modern Reader" என்ற பெயரில் தரப்படுகிறது. அதே போல, டாஸ்க் மானேஜர் மாற்றி அமைக்கப்பட்டு "Modern Task Manager" எனப் புதியதாக ஒன்று இயக்கப்படுகிறது.

விண்டோஸ் 8 சிஸ்டம் இயக்க ஷார்ட்வேர் தேவைகள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை. விண்டோஸ் 7 இயங்கிக் கொண்டிருக்கும் எந்தக் கம்ப்யூட்டரிலும் விண்டோஸ் 8 இயங்கும். சற்றுக் குறைவான அளவில் ஷார்ட்வேர் அமைப்பு இருந்தாலும் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசாப்ட் தளத்தில் புரோகிராம் டெவலப்பர்களுக்காகவும், சோதனை செய்து பார்ப்பவர்களுக்காகவும் விண்டோஸ் 8 கிடைக்கிறது.

---

**W**ord document இல் அதிக அளவில் படங்கள் இணைக்கப்பட்டிருந்தால், Text ஊடாகச் செல்ல, document ஐ scroll செய்வது சற்று தாமதப்படுத்தப்படும். படங்களுக்கென மெமரியில் அதிக இடம் எடுத்துக் கொள்ளப்படுவதே இதற்குக் காரணமாகும். இதனால், நாம் document ஐ எடிட் செய்கையில் சற்று நேரம் கூடுதலாகத் தேவைப்படும். இந்த தாமதத்தினைப் போக்க இந்த பிக்சர் பிளேஸ் ஹோல்டர் பயன்படுகிறது.

இந்த வசதியைப் பயன்படுத்துகையில், படங்கள் இருக்கும் இடத்தில் ஒரு

## Picture Place holder இன் பயன்பாடு

சிறிய கட்டம் மட்டுமே காட்டப்படும். document ஐ பிரிவியூ செய்திடுகையிலும் அச்சிடுகையிலும் இந்த படங்கள் தெரியும். எடிட் செய்கையில் தெரியாது. இதனால் நாம் வேகமாக டெக்ஸ்ட்டை மட்டும் எடிட் செய்திட முடியும்.

சரி, இந்த வசதியை எப்படி இயக்குவது என்று பார்க்கலாம்.

Tools மெனு சென்று அதில் Options தேர்ந்தெடுத்து கிடைக்கும் விண்டோவில் என்னும் View டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். இதில் Picture Place holders என்னும் இடத்தைக் கண்டுபிடித்து எதிரே உள்ள பெட்டியில் டிக் அடையாளம் உருவாக்கவும். பின் OK கிளிக் செய்து வெளியேறவும். இனி document களை எடிட் செய்கையில் படங்கள் கொண்டு வரப்படுவது இருக்காது. இதனால் நேரம் மிச்சமாகும். வேகமாக scroll செய்து எடிட் செய்திடலாம்.

---

# பிரச்சினைக்குத் தீர்வு தரும் விண்டோஸ் 7

**வி**ண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டம் உள்ள கம்ப்யூட்டரில் இயங்கும் புரோகிராம் ஒன்று சரியாக இயங்காமல் முடங்குகிறதா? இதற்கான தீர்வு தரும் வழியினை விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டம் தன்னுள்ளே கொண் டுள்ளது. ஸ்டார்ட் அழுத்திக் கிடைக்கும் Search இல், Troubleshoot எனடைப் செய்து என்டர் அழுத்தவும். அதன் பின்னர் கிடைக்கும் பட்டியலில் Troubleshooting என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது விண்டோஸ் 7 சிஸ்டத்தில் உள்ள Troubleshooter என்னும் பிரிவினை இயக்கும்.

இதில் பலவகையான பிரச்சினைகள் குறித்த பட்டியல் கிடைக்கும். இங்கு உங்கள் பிரச்சினையே பட்டியலிடப்பட்டிருக்கலாம். அல்லது அது சார்ந்த பிரிவினைத் தேர்ந்தெடுத்து, மேலும் உள்ளாகச் சென்று உங்களுடைய பிரச்சினை குறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். சில புரோகிராம்கள் தரும் பிரச்சினை எனில், அவை இதற்கு முந்தைய ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் நன்றாக இயங்கி, தற்போது சரியாக இயங்கவில்லை என்றால், இங்கு கிடைக்கும் Program Compatibility என்ற விண்டோவில் அதற்கான தீர்வினைப் பெறலாம்.

இந்த விண்டோ சென்றவுடன், நம் கம்ப்யூட்டரில் Install செய்யப்பட்டுள்ள அனைத்து புரோகிராம்களின் பட்டியல் காட்டப்பட்டு எந்த புரோகிராமில் பிரச்சினை உள்ளது என நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் Troubleshoot program என்ற பிரிவல், அந்த புரோகிராமில் ஏற்படக் கூடிய அனைத்து பிரச்சினைகளும் பட்டியலிடபடும். நம் பிரச்சினையைத் தேர்ந்தெடுத்தால், தீர்வு காட்டப்படும்.

இதற்கு முந்தைய ஒப்பரேட்டிங் சிஸ்டங்களிலும் இந்த வசதி இருந்தாலும், பெரும்பாலும் "This device is working properly" என்ற விடையே கிடைத்து வந்தது. ஆனாலும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஆனால் விண்டோஸ் 7 சிஸ்டத்தில், இந்த வசதி நன்றாகவே இயங்குகிறது.

---

# இணையவெளியில் பைல்கள் சேமிக்க

**ஹா**ர்ட் டிஸ்க், சிடி, டிவிடி, ப்ளாஷ் ட்ரைவ் என எந்த மீடியாவில் நாம் பைல்களைப் பதிந்து சேமித்து வைத் தாலும், என்றாவது ஒரு நாள், ஏதேனும் ஒரு வழியில் அவை கெட்டுப் போய் நமக்குக் கிடைக்காமல் போகலாம். நம் ஹார்ட் டிஸ்க் கெட்டுப் போகாது என்ற எண்ணத்தில், பைல்களைக் கம்ப்யூட்டரிலேயே பதிந்து வைக்கி றோம். ஆனால், நகர்ந்து செயல்படும் வகையில் அது இயங்குவதால், நாம் எதிர்பாராத ஒரு நாளில், அதன் இயக்கம் முடங்கிப் போய் பைல் களை நம்மால் பெற இயலாமல் போய்விடுகிறது. என்ன செய்தாலும் பைல்கள் கிடைப்பது இரண்டாம் பட்சம் தான் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை மோசமாகிறது. மற்ற மீடியாக்களின் வாழ்நாளும் அதே போல் தான்.

இதற்கான பல தீர்வுகளில் ஒன்றாக கிளவுட் கம்ப்யூட்டிங் முறையில் ஒரு தீர்வு கிடைக்கிறது. பல இணைய தளங்கள், நம் பைல்களை பதிந்து சேவ் செய்து வைத்திட வசதிகளை நமக்குத் தருகின்றன. ஓரளவில் பைல் களைச் சேமித்து வைத்திட இந்த வசதி இலவசமாகவே தரப்படுகிறது. இநத வகையில் சி.எக்ஸ் (CX) என்னும் இணைய தளம் இயங்குகிறது. இந்தத் தளத்தின் இணைய முகவரி: http://www/cx.com. இந்த தளம் சென்று, நம் மின்னஞ்சல் முகவரி, யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்துப் பதிவு செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் 10 ஜிபி இடம் தரப்படு கிறது. பதிந்தபின், இந்தத் தளத்தில் லொக் இன் செய்து, நாம் பதிந்து சேவ் செய்திட விரும்பும் பைல்களை, நம் கம்ப்யூட்டரிலிருந்து அப்லோட் செய்திடலாம். மிக எளிதாக இதனை மேற்கொள்ளலாம். நாம் எத்தனை பைல்களை அப்லோட் செய்துள்ளோம் என்ற கணக்கும் காட்டப்படுகிறது.


இந்தத் தளத்தில், எந்த ஒரு வகை கம்ப்யூட்டரிலிருந்தும் பைல்களை அப்லோட் செய்திடலாம். விண்டோஸ், மேக் என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மேலும், இணைய இணைப்பு வசதி கொண்ட மொபைல் போன்களிலிருந்தும் அப்லோட் மற்றும் டவுண்லோட் பணிகளை மேற்கொள்ள லாம். இதனால், நாடு விட்டு நாடு சென்றாலும், ஓரிடத்தில் இணைய இணைப்பே கிடைக்கவில்லை என்றாலும், கிடைக்கும் இடத்தில் இருந்து பைல்களைக் கையாளலாம்.

பின்னர், இதனை மீண்டும் நம் கம்ப்யூட்டருக்கு டவுண்லோட் செய்வதும் எளிதாகவும், வேகமாகவும் நடைபெறுகிறது. ஒவ்வொரு பெயர்




பதிவிற்கும் 10 ஜிபி இடம் தரப்படுவதால், தனி நபர் பயன்பாட்டிற்கு இது மிகவும் உகந்தது. எந்த இடத்திலிருந்தும், எந்த கம்ப்யூட்டரிலிருந்தும் இந்த பைல்களை டவுண்லோட் செய்து கொள்ளலாம் என்பதால், அடிக்கடி பயணம் மேற்கொள்வோர், தங்கள் பைல்களைப் பாதுகாப்பாக வைத்திட இது ஒரு சிறந்த வசதி ஆகும்.

# இலங்கையில் வறுமையான மாவட்டம் மட்டக்களப்பு




(கொழும்பு)

சமீபத்திய அரசாங்கப் புள்ளிவிவரக் கணக்கின்படி மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் வறுமையான மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இக்கணிப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை.

ஆறு இலட்சம் சனத்தொகையைக் கொண்ட இந்த மாவட்டத்திலே 20.5 வீத மானோர் வறுமைக்குள்ளாகிறார்கள் என்பது கவலைக்குரியது என, இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியளிப்புச் செயற்திட்டத்தின் தலைவரும் ஆலோசகருமான ஆர்.சிறிபத்மநாதன் கவலை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்புக்கான கடன் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலே முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. முக்கியமாக இது வறுமை ஒழிப்புக்கான கடன் திட்டமாக இருந்தாலும் வருமானம் குறைந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான திட்டம் என்றுதான் கூறுகின்றோம்.

இந்தவொரு திட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள வறுமையை முற்று முழுவதுமாக ஒழித்து விடலாம் என்று அரசு நம்பியது கிடையாது. இது அரசின் திட்டத்தில் ஒரு பகுதிதான். இதைத்தவிர அரசின் வறுமை ஒழிப்புக்கான செயற்பாடுகள் பல்வேறு மட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

2002 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஆறு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் வெற்றிகரமான முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 147 வங்கிச் சங்கங்களைச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கடன் திட்டத்திடம் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்போது ஒரு இலட்சத்துப் பதினோராயிரம் குடும்பங்கள் தற்போது உள்வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

1300 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. வங்கிகளிலே மக்களுடைய சேமிப்பு 1900 மில்லியன் ரூபாய்கள் வைப்பாக இருக்கின்றன. கடனை விடக் கூடுதலாக மக்களிடம் சேமிப்பு இருக்கின்றது. தாங்கள் வாழ்க்கையில் எப்படியும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதையே இது காட்டுகிறது. இதுவரையும் 445 மக்கள் சக்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் உண்மையான சமாதானம் அந்த நாட்டிலுள்ள வறுமை ஒழிப்பு தனைக் கொண்டுதான் அடைய முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்ட நடவடிக்கையை எதிர்நோக்கும் வவுனியா தனியார் மருந்தகங்கள்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் இயங்கி வரும் இருபத்திரெண்டு தனியார் மருந்தகங்களில் நேற்றைய தினம் சுகாதாரத் திணைக்களத்தின் அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.


இப்பரிசோதனையின் போது பதிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் பலவற்றில் மருந்தாளர்கள் பிரசன்னமாகியிருக்காமை அவதானிக்கப்பட்டது. பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இதுவரை அவை தங்களை பதிவு செய்து கொள்ளாமை மற்றும் தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் இல்லாமை என்பன அவதானிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

# வன்னியில் பெய்துவரும் அடைமழையினால் நிரந்தர வீடுகள் இல்லாதவர்கள் அவதி

(கிளிநொச்சி)



வன்னியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடை மழையினால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பெருமளவிலான குடும்பங்கள் தொடர்ந்தும் மரங்களின் கீழேயோ அல்லது தறப்பாள் கொட்டகைகளின் கீழேயோ வாழ்ந்து வருகின்றனர்.


குறிப்பாக சுதந்திரபுரம், தேவிபுரம், விசுவமடு, உடையார்கட்டு, கைவேலி மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளம் புகுந்துள்ள நிலையில் எங்கு செல்வது என்பது கூட புரியாது அம்மக்கள் திண்டாடி வருகின்றனர்.

யுத்த நடவடிக்கைகளால் தமது வீடுகள் அனைத்தினையும் இழந்த நிலையிலேயே வன்னி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியா உள்ளிட்ட தரப்புகள் பலவும் வீட்டுத்திட்டங்களை முன்னெடுப்பதாக கூறுகின்ற போதும், மக்களுக்கு எதுவுமே கிட்டாத நிலையே தொடர்கின்றது. ஐம்பதினாயிரம் வீடுகளை வடக்குக், கிழக்கு மக்களுக்கு கட்டி வழங்கப்போவதாக இந்தியா கூறியிருந்த போதும் குறைந்த எண்ணிக்கையிலான வீடுகளை மட்டும் இதுவரை கட்டமுடிந்துள்ளது.

இந்நிலையில் அடுத்து வரும் நாட்களில் பருவ கால மழை தொடங்கவுள்ள நிலையில் அச்சத்துடன் அதை எதிர் கொள்ளும் நிலையில் மக்கள் உள்ளனர்.

# “ஒலிவர் டுவிஸ்ட்” பாணியில் சிறுவனுக்குக் கொடுமை

(கொழும்பு)



“ஒலிவர் டுவிஸ்ட்” கதையில் வருவது போன்று கொடுமைகளை அனுபவித்ததாகக் கூறப்படும் ஒரு சிறுவனின் நிலை பற்றி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 15 வயதான சிவா சிவனேஸ்வரன் சிவலிங்கம் சார்பில், சட்டம் மற்றும் நீதிக்கான அமைப்பு இந்த மனுவைத் தாக்கல் செய்தது.

மேல் மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர், ஜீபிஏ சோமரட்ன, களுத்துறை நன்னடத்தை உத்தியோகஸ்தர் பிளியூ.சி பிரியங்கனி, பாதிக்கப்பட்ட சிறுவன் சிவா, தேசிய சிறுவர் நன்னடத்தை அதிகாரசபை தலைவி அனோமா திசாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சீர்திருத்த நிறுவன பிள்ளைகள் பலர் உள்ளதாகக் கூறப்படுகிறது. சிவா (15), அயேஷ் உபசாந்த (15), துவா தனுஷன் (15) ஆகிய மூன்று பிள்ளைகள் மக்கொனவிலுள்ள டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தில் கொடுமைப்படுத்தப்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

பாடசாலை முடிந்தபின், இவர்கள் பன்றிகள் மற்றும் வேறு பண்ணை விலங்கு களை கவனிக்கும் வேலையில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் சில வேளை உணவு கொடுக்காமலும் இவர்களிடம் வேலை வாங்கப்பட்டது என மனுவில் கூறப்பட்டுள்ளது. ஜனவரி 10 ஆம் திகதி விலங்குப் பண்ணையில் பசியோடு வேலை செய்தபின் இந்த மாணவர்கள் சமையலறைக்குள் நுழைந்து தேநீர் அருந்தினார்கள். இதனால், ஆத்திரம் கொண்ட சிறுவர் இல்ல ஆசியர்கள், உத்தியோகதர்கள், பணிப்பாளர் மாக்ஸ் அருட் சகோதரர் ஆகியோர் இந்தப் பிள்ளைகளைத் தாக்கியபின் பயகல பொலிஸ் நிலையத்தில் கையளித்தனர். பொலிஸார் இவர்கள் மீது பொய்க்குற்றங்களைச் சாட்டி நீதிமன்றில் ஆஜர் செய்தனர் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

நன்னடத்தை ஆணையாளர், நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஆகியோர் டொன் பொஸ்கோ சிறுவர் அதிகாரிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாகவும் இவர்கள் தமது கடமைகள், பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிரானி ஏ.பண்டாரநாயக்க, நீதியரசர் பிரடீனாயக்க ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத போதைப்பொருளைக் கட்டுப்படுத்த மதுவரித் திணைக்களத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில், வாழும் மக்கள் முகம் கொடுக்கும் இந்தப் பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்காக விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு மதுவரித் திணைக்களத்திடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மதுவரித் திணைக்களத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சட்டவிரோத போதைப் பொருள் காரணமாக கொழும்பு புறநகர் பகுதியில் வாழும் மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார். போதைப்பொருள் பாவனையாளர்களை இதில் இருந்து மீட்க, மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# திருகோணமலையில் விபத்து ஒருவர் பலி – 13 பேர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 13 படையினர் படுகாய மடைந்துள்ளனர். திருகோணமலை திஸ்ஸ கடற்படைத் தளத்தில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்ட படையினரை ஏற்றிச் சென்ற வாகனமே புகநர்ப் பகுதியில் மரம் ஒன்றுடன் மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 14 படையினர் படுகாயமடைந்தனர். இவர்கள் சேருநுவர, கந்தளாய் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த படையினரில் ஒருவர் நேற்றுக் காலை மரணமானதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகால்ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

# சேவேகுரா நினைவு தினம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஆர்ஜென்டின புரட்சிவாதியான சேவேகுரா என அழைக்கப்படும், ஏர்னெஸ்ற்றோ குவேரா டி லா செர்னாவின் நினைவு தினக் கொண்டாட்டங்களை, ஜே.வி.பி. ஒத்திவைத்துள்ளது. எனினும், இந்த நிகழ்வை அனுஷ்டிக்கும் வாய்ப்பு ஜே.வி.பியின் கைகளை விட்டுப் பறிபோனதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை மறுத்துள்ள கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தேர்தல் காலத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.




# பெண்களின் அரசியலை வலுப்படுத்த மட்டக்களப்பில் கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

இஸ்திரி மேலா பெண்கள் அமைப்பானது பெண்கள் மத்தியில் அரசியலை வலுப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் தமிழ், முஸ்லிம் பெண்களை இணைத்து நேற்று முன்தினம் முழுநாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

இக்கருத்தரங்கிற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி, காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா ஹம்ஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஸ்டீவ் ஜொப்ஸ்



**1976** இல் தமது நண்பர் வோஸ்னியாக்குடன் அப்பிள் நிறுவனத்தை தொடங்கினார் ஸ்டீவ் ஜொப்ஸ. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த சில ஆண்டாக சிகிச்சை பெற்று வந்த 56 வயதான ஸ்டீவ் ஜொப்ஸ கலி போர்னியாவில் உயிரிழந்ததாக அபபிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

அப்பிள் தயாரிப்புகளைக் கடைசி நிமிடம் வரை ரகசியமாக வைத்திருந்ததுபோல் தன் அந்தரங்க வாழ்க்கையையும் அவர் ரகசியமாகத்தான் வைத்திருந்தார். தன்னைப் பற்றி நல்லவிதமான செய்திகள் வெளி வருவதைக்கூட அவர் விரும்பவில்லை.

ஜொப்ஸ் அறுபதுகளில் எழுந்த ஷிப்பி எதிர் கலாசார குழுக்களின் வாழ்வியல் முறைகளினாலும் கலைகளினாலும் தாக்கம் பெற்றவர். அவர் கற்றுகொண்ட பௌத்தம் அப்பிள் பொருட்களின் எளிமை அழகியலைக் கட்டமைத்தது. மதக் குறியீடுகளின் மறைமுகமான பயன்பாடு அப்பிள் பொருட்களுக்கு ஏராளமான விசுவாசிகளை உருவாக்கியது. உதாரணமாக ஒன்று: கடிக்கப்பட்ட அப்பிள் லோகோ, ஆதியாகமத்தில் கடவுளின் ஆணையை மீறி அப்பிளைக் கடித்து அறிவின் பாதையைத் தேர்ந்தெடுத்த ஆதாம் ஏவாளின் அப்பிளை மறைமுகமாக நினைவுகூர்கிறது.

ஸ்டீவ் ஜொப்ஸ் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப் பட்டவர். தன் தாயைப் பற்றியும் அவர் தத்து கொடுத்ததைப் பற்றியும் இவர் பின்னர் அறிந்து கொண்டார். ஜொப்ஸுக்குத் தன் தாய் மீது பெரிதாக கோபமில்லை. ஆனால் அவர் தந்தையைத் தெரிந்து கொணட பிறகும் அவருடன் உறவு கொண்டாட வில்லை.

ஸ்டீவ் ஜொபசின் தங்கை மோனா சிம்ப்சன் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர். பிரிந்து சென்ற தந்தையை வைத்து ஒரு நாவல், ஸ்டீவ் ஜொப்சை வைத்து ஒரு நாவல் என்று உண்மைக்கு மிக அருகே எழுதினார். அந்த நாவல்கள் சூப்பர் ஷிட் ஆயின. Regular Guy என்னும் நாவல் அச்சு அசல் ஸ்டீவ் ஜொப்ஸின் சுயசரிதம். கதாநாயகனின் குணாதிசய மும் என் குணாதிசயமும் சுமார் 25 சதவிகிதம் ஒத்துப்போகிறது என்று ஸ்டீவ் ஜொப்ஸ் மிகவும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். ஆனால் குறிப்பாக எந்த குணாதிசயம் என்று எல்லாம் சொல்லமாட்டேன் என்றார். தன்னைப் பற்றி மிகவும் பகிரங்கமாக எழுதியதற்காக தங்கையைக் கோபித்துக்கொண்டது உண்மையா என்னும் கேள்விக்கு பாசமலர் அண்ணன் விடையளிக்கவில்லை..

மணமாகாத பெற்றோருக்குப் பிறந்து, தாய், தந்தை யார் என அறியாமல் துன்புற்ற ஸ்டீவ் ஜொப்ஸ் தன் மகளையும் அவ்வாறு அலைக்கழித்ததை என்னவென்று சொல்வது? கல்லூரியில் இருந்த காலத்தில் கிரிஸ் ஆன் என்ற பெண்ணுடன் ஸ்டீவ் ஜொப்ஸுக்கு முதல் காதல். ஆனால் அந்த காதலிக்கு போட்டியாக இன்னொரு காதல், அப்பிள். ஆதலினால் முதல் காதலியின் கருவைக் கலைக்க ஸ்டீவ் ஜொப்ஸ் வற்புறுத்தினார். கிரிஸ் ஆன் ஒப்புக்கொள்ளவில்லை.

கோபித்துக்கொண்டு கிரிஸ் ஆன் சென்ற இடம் அவரகள் பழகிய அதே அப்பிள் தோட்டங்கள். ஸ்டீவ் ஜொப்ஸ் அவரின் வசந்த காலத்தைக் கழித்த இடமாகக் கருதி தன் கம்பெனிக்கு பெயர் வைக்க காரணமாக இருந்த அதே அப்பிள் தோட்டம். அங்குதான் ஸ்டீவ் ஜொப்ஸின் முதல் பெண் லிசா பிறந்தார். அப்பொழுது அப்பிளுக்கு வயது இரண்டு. ஸ்டீவ் ஜொப்ஸின் வயது 23. அவர் பிறந்தபோது அவர் பெற்றோருக்கு இருந்த அதே வயது. ஸ்டீவ் ஜொப்ஸ் கிரிஸ் ஆனை மணம் செய்யவில்லை!

குழந்தை பிறந்த சில நாட்கள் கழித்து பார்க்கச் சென்ற ஸ்டீவ் ஜொப்ஸ் குழந்தைக்கு லிசா என பெயர் வைத்தார். அலுவல் முடிந்தது என கிளம்பி விட்டார். தன் மகளை அவர் பார்க்கவில்லை. விரும்பவில்லை. என்றாலும், தன் மேற்பார்வையில் உருவாகிக்கொண்டிருந்த கணிப்பொறிக்கு அவர் வைத்த பெயர், லிசா.

லிசாவுக்கு பத்து வயது இருக்கும் போது, அவளே ஓட்டிக்கொண்டு வந்த வண்டியில் ஸ்டீவ் ஜொப்ஸ் வீட்டு வாசலில் வந்து நின்றதாகவும், ஸ்டீவ் பாய்ந்து வந்து கட்டியணைத்துக் கொண்டதாகவும் கதைகள் உள்ளன. லிசா ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து இன்று எழுத்தாளராக இருபபதெல்லாம் தற்காலக் கதை.



# உலகின் அழகிய நாய்க்குட்டி

அமெரிக்காவில் உள்ள ஜெ.எச்.லீ என்பவர் தான் வளர்பபதற்காக பொமேரியன் வகை நாய்க்குட்டி ஒன்றை வாங்கி வந்தார். நாய்க்குட்டியின் பெயரில் 2009 ஆம் ஆண்டு பேஸ்புக்கில் ஒரு கணக்கைத் தொடங்கினார். நாய்க்குட்டிக்குப் 'பூ' என்று பெயரிட்டு, அதன் நூற்றுக்கும் மேற்பட்ட புகைப் படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டார்.

நாய்க்குட்டிக்கு உலகெங்கிலும் இருந்து சுமார் 25 இலட்சம் இணையதள ரசிகர்கள் உருவாகியுள்ளனர். உலகில் ஏராளமானோரால் விரும்பப்படும் அழகிய நாய் என்ற பெருமையைப் பெற்றுள்ளது பூ. என் நண் பர்களிடம் நாயின் புகைப்படங்களைக் காட்ட வேண்டும் என்று விளையாட்டாக இணையதள கணக்கை ஆரம்பித்தேன்.

ஆனால் இவ்வளவு விளம்பரம் கிடைக்கும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்கிறார் நாயின் உரிமையாளர்.

# தனுஷுக்கு பதில் சிம்பு!



**தே**சிய விருதுகள் பலவற்றை வென்ற ஆடுகளம் படத்திற்கு பிறகு, மீண்டும் தனுஷை வைத்து ஒரு படம் இயக்க இருந்தார் வெற்றிமாறன். இவரது முதல்படமான பொல்லாதவனிலும் தனுஷே நடித்திருந்தார். ஆனால், வட சென்னையை களமாகக் கொண்ட இந்த 'அடிதடி' கதைக்கு, தனுஷை விட, சிம்புவே பொருத்தமாக இருப்பார் என்று, கடைசி நேரத்தில் சிம்புவை, நடிக்க வைத்திருக்கிறார் வெற்றிமாறன்.

# அங்கவீனர்கள் மீதான அக்கறை எங்கே?





**போ**ரினால் அங்கவீனமடைந்தவர்களின் நிலமையைக் கருத்திற்கொண்டே 2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் பல்வேறு உதவி அமைப்புக் களும் உதவித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஏனெனில், போர் முடிந்ததற்குப் பின்னரும் போரின் விளைவான அனர்த்தங்களை அதிகளவில் அனுபவிப்பவர்கள் போர்க்காலத்தில் உடலுறுப் புக்களை இழந்தோரே.

ஆகவேதான் அவர்களுக்கான நிவாரணத்தைக் குறித்து கூடுதல் அக்கறை கொள்ளப்படுகிறது.

போரினால் ஏற்படுகின்ற பிற அழிவுகளை ஓரளவிற்கு புனரமைக்கலாம் அல்லது மீளக் கட்டியெழுப்பலாம். ஆனால், உயிரிழப்புக்களையும் உடல் உறுப்பு இழப்புக்களையும் எதன் மூலமும் ஈடுசெய்ய முடியாது.

இந்த நிலையில் உடல் உறுப்பு இழப்பு என்பது அவர்கள் வாழும் காலம் வரை அவர்களைத் தொடர்ந்து பாதித்துக் கொண்டிருக்கும் ஒரு பெரிய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வைக் காணவேண்டுமாக இருந்தால், நிலையான உதவித்திட்டங்கள் அவசியம். அதைப்போல பாதிக்கப்பட் டோரின் வாழ்க்கை மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு இவர்கள் சுய தொழில் முயற்சியில் ஈடுபடுவதற் கான பொருத தமான பயிற்சித் திட் டங்கள், உதவித் திட்டங் கள், ஆதாரத் திட் டங்கள் உருவாக்கப் பட வேண் டும்.

அதற்கு பாதிக்கப் பட்டோர் பற றிய கணக் கெடுப்பு மிக அவசி யம். அந்தக் கணக்கெடுப்பில் பாதிப்புகளின் முழு விபரங்களும் இனங்காணப்படும். குறிப்பாக குழந்தைப் பிராயம் அல்லது சிறுபிராயத்தில் உடலுறுப்புகளை இழந்தோர், உழைப்பாளிகளாக இருப்போரில் உடல் உறுப்புக்களை இழந்தோர், முதி யோரில் உடல் உறுப்புக்களை இழந்தோர் போன்றவை ஒருவகையாகவும், கண்ணிழந்தோர், கையிழந்தோர், காலிழந்தேர், உடலியக்கம் இழந்தோர் என எந்த மாதிரியான பாதிப்புக்களுக்கு உட்பட்டோர் என்ற வகை மாதிரிகளையும் அறியக் கூடியதாக இருக்கும்.

இத்தகைய ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டாலே அதற்குரிய வகையிலான திட்டத்தை வகுத்து அதற்கான நிதியை ஒதுக்க முடியும். அல்லது அதற்கான நிதியைப் பெறமுடியும். ஆனால், இந்த ஆரம்பப் பணிகளைப் போல இதுவரையில் அதாவது, போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் எந்தத் தரப்பினாலும் மேற்கொள்ளப்படவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விசயமாகும். இது உண்மையில் சம்மந்தப்பட்டவர்களின் மீதான கண்டனத்திற்குரியதும் கூட.

அரசாங்கம் இதனைப் பொறுப்புடன் செயற்படுத்தவில்லை என்றால் அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல் கட்சிகளுக்கும், பொது அமைப்புக்களுக்கும், ஊடகங்களுக்கும் உரியது. ஆனால், இவர்கள் கூட இந்த விடயத்தில் மந்தமாக இருந்துள்ளனர். இன்னும் இதுதான் நிலைமை.

**- கிருக்ஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து.**

# சகாப்தத்தை உருவாக்க ராமதாஸ் அழைக்கிறார்

(வேலூர்)

உள்ளாட்சித் தேர்தலில் திராவிட கட்சிகள் இல்லாத ஒரு சகாப்தத்தை உருவாக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

வேலூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுகையில், தனித்து போட்டியிட வேண்டும் என்கிற நிலையை எடுத்துள்ள பா.ம.க.வுக்கு மக்கள் ஆதரவு தரவேண்டும். திராவிட கட்சிகள் இல்லாத ஒரு சகாப்தத்தை உருவாக்க வேண்டும்.

தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த மாற்றம் உள்ளாட்சி தேர்தல் மூலம் வர வேண்டும். பா.ம.க. ஒரு வித்தியாசமான கட்சி, எல்லோருக்கும் கல்வி, அதுவும் கட்டணமில்லா கல்வி கொடுத்து, அவர்கள் வேலை வாய்ப்பை பெறு தேவையான வற்றை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்.



# இந்தியச் செய்மதிகள் நான்கு விண்ணில்

(வேலூர்)

இந்தியாவின் பி.எஸ்.எல்.வி விண்ணோடம் எதிர்வரும் 12-ம் திகதி விண்ணில் செலுத்தவுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து இந்த விண்ணோடம் ஏவப்படவுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. விண்ணில் செலுத்தப்பட உள்ள இந்த பி.எஸ்.எல்.வி விண்ணோடம், இந்தியா மற்றும் பிரான்ஸ் கூட்டுத் தயாரிப்பில் உருவாகியுள்ளது.

1000கிலோ எடைகொண்ட செயற்கைக் கோளும், 45 கிலோ எடை கொண்ட மூன்று சிறிய வகைச் செயற்கைக் கோள்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டு கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ள செயற்கைகோள் மூலம் பருவகாலமாற்றம் மற்றும் உலகளவிலான வெப்பம், மழை போன்றவை குறித்து ஆராயப்படவுள்ளன. ராக்கெட் செலுத்துவதற்கான அனைத்து கட்டப் பணிகளும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக, இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# இந்தியச் சகோதரர்கள் சவூதியில் சுட்டுக்கொலை

சவூதி அரேபியாவின் தை.'ப் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த, முகமது சாகீர் அகமது மற்றும் அகமது யாசின் ஆகியோர், அந்த நாட்டைச் சேர்ந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த சகோதரர்கள் இருவரும் உத்தரப் பிரதேசத்தின் ஜான்பூரைச் சேர்ந்தவர்கள்.

தொழிற்சாலைப் பணியாளர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை ஒன்றை, உரிய காலத்தில் முடித்துத் தராததால் அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளருக்கும் பணியாளர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது அந்த நாட்டைச் சேர்ந்த ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில், சகோதரர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இரண்டு ஆண்டுகளாய் தமிழ்ப் படங்கள் பார்க்காத இசையமைப்பாளர் ரஹ்மான்

(சென்னை)


நான் தமிழ்ப் படங்களைப் பார்த்து 2 ஆண்டுகள் ஆகிறது, என்று ஒஸ்கார் வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கூறியுள்ளார். ஆதி - தன்ஷிகா ஜோடி நடிக்க, வசந்தபாலன் இயக்கும், அரவான் படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா, சென்னையில் நடந்தது. பாடல்களை, இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் வெளியிட, இயக்குனர் மணிரத்னம் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய ஏ.ஆர்.ரஹ்மான், தமிழ் ரசிகர்கள் மத்தியில் சினிமா பற்றிய ஞானம் வளர்ந்து இருக்கிறது. அவர்களின் ரசனை உயர்ந்து இருக்கிறது.

ஒரு படத்தின் சில காட்சிகளைப் பார்த்து, அது எப்படிப்பட்ட படம் என்பதை கணித்து விடுகிறார்கள். நான், தமிழ்ப்படங்களைப் பார்த்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். இந்த படத்தின் காட்சிகளைப் பார்க்கும்போது, எனக்கும் அதிக தமிழ்ப் படங்களுக்கு இசையமைக்க வேண்டும் என்ற ஆசை வந்திருக்கிறது, என்று கூறினார்.



# தாஜ்மஹால் இடிந்து விடும் அபாயம்!



(வேலூர்)

உலக அதிசயங்களில் ஒன்று காதல் சின்னமான தாஜ்மஹால். 358 ஆண்டுகளுக்கு முன்பு ஷாஜகான் தன் மனைவி மும்தாஜ் நினைவாகக் கட்டிய பளிங்கு மாளிகை தான் தாஜ்மஹால்.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ராவில் யமுனா நதிக்கரை யோரம் இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் அமைதியாகக் காட்சித் தரும் தாஜ்மஹாலைப் பார்க்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் ஆக்ரா வருகின்றனர்.

தாஜ்மஹால் அமைந்திருக்கும் யமுனா நதி, நிறுவனக் கழிவுகளால் மாசுபட்டுள்ளது. இதனால் தாஜ்மஹாலின் அடித்தளம் அரிக்கப்பட்டு வருகிறது. இப்படியே விட்டுவிட்டால் அடித்தளம் முழுவதுமாக அரிக்கப்பட்டு தாஜ்மஹால் விழுந்துவிடும்.

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் 2 முதல் 5 ஆண்டுகளில் தாஜ்மஹால் இடிந்துவிடும் என்று ஆக்ரா எம்.பி. ராம் சங்கர் கதேரியா டெய்லி மெயில் லுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கட்டிடக் கலையின் அதிசயமாகத் திகழும் தாஜ்மஹால் ஏற்கனவே பொலிவிழந்து வருகிறது. யமுனா நதியில் தண்ணீர் இல்லாததால் மரத்தால் ஆன அடித்தளம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இது குறித்து பேராசிரியர் ராம்நாத் கூறுகையில், தாஜ்மஹால் யமுனா நதியின் கரையோரம் அமைந்திருக்கிறது. ஆனால் தற்போது யமுனா நதி வற்றி விட்டது.

இதை தாஜ்மஹாலைக் கட்டியவர்கள் எதிர்பார்த்திருந்திருக்க மாட்டார்கள். யமுனா இல்லை என்றால் தாஜ் மஹாலும் இல்லை என்றார்.

நாசம் அடைந்து கொண்டிருக்கும் அடித்தளத்தை சீர்செய்யவில்லை என்றால் இன்னும் 5 ஆண்டுகளில் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் இடிந்து விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# லொறி மோதி வேட்பாளர் பலி

(கோயம்புத்தூர்)

கருமத்தம்பட்டி பஞ்சாயத்து காங்கிரஸ் வேட்பாளர் லொறி மோதி பலியானதால், அங்கு தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் கருமத் தம்பட்டி டவுன் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு காங்கிரஸ், சார்பில் போட்டியிட மனு செய்தவர் சுப்ரமணி. அவர் இன்று சோமனூர் அருகே மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த லொறி மோதி பலியானார். இதனால் அங்கு தேர்தல் ஒத்திவைக்கப்படவுள்ளது.

# உலகிலேயே மிகக் குறைந்த கணினி அறிமுகம்

ரூ.1,500 எனும் நம்ப முடியாத விலையில் உலகின் மிகக் குறைந்த விலைக் கையடக்கக் கணினி இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

டில்லியில் கடந்த புதன் கிழமை நடந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் கபில் சிபல் இந்த மடிக் கணினியை அறிமுகம் செய்து வைத்தார்.

ஆகாஷ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கையடக்கக் கணினியை பிரிட்டனைச் சேர்ந்த டேட்டா வைண்டு நிறுவனம் தயாரித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் பயிலும் 1,00,000 இலட்சம் மாணவர்களுக்கு இந்த மடிக்கணினியை, மத்திய அரசு மானியத்துடன் ரூ.1,500 விலையில் வழங்க இருக்கிறது.

ஆனால் வர்த்தக ரீதியில் அறிமுகம் செய்யப்பட இருக்கும் ஆகாஷ் மடிக்கணினி 3ஜி வசதியுடன் வருகிறது.



ஆன்ட்ராய்டு ப்ரேயோ 2.2 வெர்ஷன் ஒபரேட்டிங் சிஸ்டம் கொண்ட இந்த கணினி 7 இஞ்ச் திரையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக ரீதியில் அறிமுகம் செய்யப்பட இருக்கும் ஆகாஷ் மடிக் கணினிக்கு ஏர் செல் நிறுவனம் சிம் கார்டுகளை வழங்க இருப்பதாக டேட்டா வைண்டு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வர்த்தக ரீதியில் இந்தக் கணினி ரூ.3,000 விலையில் விற்பனைக்கு வர இருப்பதாகவும் டேட்டா வைண்டு தெரிவித்துள்ளது.

தற்போது இந்திய சந்தையில் ஏர்டெல் தொலைத்தொடர்பு சேவை நிறுவனத்தின் துணை நிறுவனமான பீட்டெல் நிறுவனம் ரூ.9,999க்கு மடிக் கணினியை விற்பனை செய்து வருகிறது.

இதுவரை இந்த மடிக் கணினியே இந்திய மார்க்கெட்டில் குறைந்த விலை கணினியாக இருக்கிறது.

# இந்திய-சுவிஸ் வரி ஒப்பந்தம்: அமுலுக்கு வருகின்றது

வரிஏய்ப்பு, கறுப்புப் பணம் பதுக்கல் உள்ளிட்ட விவரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக இந்தியா, சுவிட்சர்லாந்து இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை உறுதி செய்வதற்கான 100 நாள் காத்திருப்பு காலம் வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது.

இதையடுத்து, அடுத்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் சுவிட்சர்லாந்துக்கும், அடுத்த ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் இந்தியாவுக்கும் இந்த ஒப்பந்தம் அமுலாகும் என இந்திய வெளியுறவு அமைச்சகச் செயலர் எம். கணபதி தெரிவித்தார்.

இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்புக்காக இரு நாடுகளுக்கும் இடையே 1994 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன் பிறகு 2000 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் கூடுதல் விதிமுறைகள் சேர்க்கப்பட்டுத் திருத்தப்பட்டது.

இதை மேலும் திருத்துவதற்கான ஒப்பந்தம் டில்லியில் கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி கையெழுத்தானது. இப்படியொரு திருத்தம் செய்துகொள்வதற்கு கடந்த ஜூன் மாதமே சுவிஸ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்திருந்தது.

அந்நாட்டு விதிமுறைகளின்படி பொது மக்களின் ஆட்சேபங்களைத் தெரிவிப்பதற்காக 100 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது. அந்த அவகாசம் வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது. இதையடுத்து ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இரு நாடுகளும் வரி தொடர்பான விபரங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டேல் அண்மையில் சுவிட்சர்லாந்து சென்றபோது, இந்த ஒப்பந்தம் விரைவில் உறுதி செய்யப்படும் என அந்நாட்டு அதிகாரிகள் அவரிடம் கூறியதாக கணபதி தெரிவித்தார்.

# பின்லாடன் கொலை பாகிஸ்தான் ஆணைக்குழு மருத்துவர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு




அல்கய்டா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதான அமெரிக்க இராணுவ நடவடிக்கை தொடர்பான விசாரணை செய்யும் பாகிஸ்தானிய ஆணைக் குழுவொன்று அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு உதவியதாகக் கூறப்படும் வைத்தியரை தேசத்துரோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

ஒசாமா பின்லேடன் குறித்த இடத்தில் உள்ளாரா வெனத் தீர்மானிக்க உதவும் வகையில் மரபணு (டி.என்.ஏ.) மாதிரிகளை பெறுவதற்காக அபோதாபாத் என்னும் இடத்தில் சி.ஐ.ஏ. ஏற்பாடு செய்த போலித் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியதாக டாக்டர் 'கீல் அவ்ப்ரிடி குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அல்கய்டா தலைவரான ஒசாமா பின்லேடன் அமெரிக்க திடீர்ப்பாய்ச்சல் குழுவால் மே மாதம் இரண்டாம் திகதி கொல்லப்பட்ட சில நாட்களின் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார். இந்த ஆணைக்குழு பல உளவு அதிகாரிகளை விசாரித்து வருகின்றது. கடந்த புதன்கிழமை இக்குழு பின்லேடனின் குடும்பத்தை விசாரணை செய்தது.

அமெரிக்கா எவரும் அறியாத வகையில் இந்தத் தாக்குதலை மேற்கொண்டது எவ்வாறு என ஆராய்வதற்காக முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியொருவர் தலைமையில் பாகிஸ்தான் விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளது இது இராணுவ நகரமான அபோதாபாத்தில் பல வருடங்களாக ஒளிந்து வாழ எப்படி ஒசாமா பின்லேடனால் முடிந்ததென்பதையும் இந்த ஆணைக் குழு ஆராய்ந்து வருகின்றது.

# பாகிஸ்தான் உளவு அமைப்பு மீது பராக் ஒபாமா குற்றச்சாட்டு




பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுடன் அந்நாட்டு உளவு அமைபபான ஐ.எஸ்.ஐ.க்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க அதிபர் ஒபாமா குற்றம்சாட்டியுள்ளார். வொஷிங்டனில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஒபாமா இதனைத் தெரிவித்தார். இந்தியா-பாகிஸ்தான் அமைதிப பேச்சுவார்த்தைக்கு எல்லாத் தரப்பினரும் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அதனை பாகிஸ்தான் புறக்கணிக்கிறது. மேலும் பாகிஸ்தானிலிருந்து செயற்படும் ஹக்கானி குழுவினருடன் அந்நாட்டு உளவு அமைப்பிற்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. சமீபத்தில் நடந்த சம்பவங்களே இதற்கு சாட்சி. மேலும் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதும் ஒரு வகையில் பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.யும் காரணமாக உள்ளது என்றார். இது சர்வதேச அளவில் பிரச்சினையை உண்டாக்கும். அமெரிக்காவின் நலனை புறக்கணித்தால் விளைவுகள் ஏற்படும். மேலும் இந்தியாவுடன், பாகிஸ்தான் நட்புடன் இருப்பதே பாகிஸ்தானுக்கு நலம் என ஆலேசனை தொவித்தார்.

# ஆர்ஜெண்டினாவில் நில நடுக்கம்

தென் அமெரிக்க நாடான ஆர்ஜெண்டினாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் வடமேற்குப் பகுதியிலுள்ள ஜுஜுய் மற்றும் சால்டா பகுதிகளில் காலை 8 மணியளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.2 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்போ, அதிகளவிலான பொருட்சேதமோ ஏற்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை உணரப்பட்ட நிலநடுக்கத்திலேயே இந்த நிலநடுக்கந்தான் அதிக அதிர்வை ஏற்படுத்தியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். நிலநடுக்கத்தை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளிலிருந்து மக்களும், பள்ளிகளிலிருந்து மாணவர்களும் பாதுகாப்பான பகுதிக்கு இடம்பெயரச் செய்யப்பட்டனர்.

# சுவிட்சர்லாந்தில் இந்தியர்களிடம் புதுவித முறையில் திருட்டு




சுவிட்சர்லாந்து செல்லும் இந்தியர்களிடம் நமஸ்தே சொல்லி பிக்பாக்கெட் அடிக்கும் கும்பல் அலைகிறது. சுவிட்சர்லாந்துக்கு இந்தியர்கள் பலர் சுற்றுலா, வர்த்தக விஷயமாக சென்று வரு கின்றனர். மிகப் பிரபலமான ஜெனிவா நகரில் பிக்பாக்கெட் கும்பல் இந்தியர்களை குறிவைத்து கொள்ளை அடித்து வருவது அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தி உள்ளது. சாலைகளில் இந்தியர்களை பார்த்தால் அங்கு வரும் ஒருவர் நமஸ்தே என்று சொல்வார் அல்லது ஷாருக்கான் என்று சொல்வார். உடனே அட இந்திய மொழியில் வணக்கம் சொல்கிறாரே என்று இந்தியர்கள் ஆச்சரியமாக அவரைப் பார்க்கின்றனர். அந்த நேரத்தில் இன்னொரு ஆசாமி அருகில் வந்து பாலிவுட் இந்தி சினிமாப் பாணியில் ஆடிப் பாடுவார். அதை ரசித்து பார்த்து விட்டு இந்தியர்கள் சென்று விடுவார்கள். நமஸ்தே சொன்ன வரும், டான்ஸ் ஆடியவரும் அங்கிருந்து மறைந்து விடுவார்கள். அந்த சிறிது நேரத்தில் இந்தியர்களுடைய பர்ஸ், பை, விலையுயர்ந்த பொருட்கள் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டது பிறகுதான் தெரிய வருகிறது.

# வானவில்லின் நான்காவது வளயம்

வானவில்லின் நான்கு வளயங்களும் முதற் தடவையாக புகைப்படம் பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நான்கு வளயங்களைக் கொண்ட வானவில் இரண்டாவது முறையாக அவதானிக்கப்படுகிறது. எனினும் முதல் முறையாக விஞ்ஞானிகள் அதனைப் புகைப்படம் எடுத்துள்ளனர். வானவில்லின் மூன்று நிறங்கள் மாத்திரமே தெளிவாக் தெரியக் கூடியதாக இருக்கும். ஏனைய ஏழு வர்ணங்களில், நான்கு வர்ணங்கள் கண்ணுக்கு புலப்படாததாக இருந்தது. தற்போது நான்கு வளயங்களைக் கொண்ட வானவில் புகைப்படம் பிடிக்கப்பட்டுள்ளது. எனினும், சாதாரண புகைப்படங்களைப் போல, இந்தப் புகைப் படத்தில் நான்காவது வர்ணம் தெளிவாக தெரியவில்லை, என விஞ்ஞானிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மெய்தான் பாருங்கோ...

## நில ஆக்கிரமிப்பு



தமிழர்களுக்கான உரிமைப் போராட்டம் ஆரம்பித்த காரணத்தை பலர் பல்வேறு விதமாகச் சொல்லுவினம் பாருங்கோ, ஆதியில டட்லி சேனநாயக்காவிலிருந்து பண்டாரநாயக்கா ஊடாக அதுக்குப் பிறகு வந்த ஆட்சியாளாரோடு சந்திரிகா வரையிலும் போரும் போராட்டமும் அவலமும் - ஆக்கிரமிப்புகளுமாக இந்த இலங்கை தேசம் இடறுப் பட்டுப் போனதை எல்லாரும் அறிஞ்சதுதானே.

தமிழ்ப் பகுதியளில சிங்களக் குடியேற்றம் நடக்குது... எண்டு கூத்தாடின படி, குறுகிய மன அரசியல் நடத்துற சமயகுரவர் கூட்டம் இது வரையும் எந்த வொரு குடியேற்றத்திட்டத்தையும் தடுத்து நிறுத்தி 'தலை நிமிர்ந்ததாக' இங்கு சரித்திரமே இல்லை.

எங்கட மண்ணை சிங்களவன் ஆக்கிரமிக்கிறான் எண்டு மேடைக்கு மேடை.. சந்திக்குச் சந்தி... இனவாதம் பேசும் அதேவேளையில, நாங்கள் எங்களுக்குள்ள என்ன செய்து கொண்டிருக்கிறம்...? எண்டதை ஒருத்தரும் சிந்திக்கிறேல்லை எண்டது கொஞ்சம் கசப்பான உண்மைதான் கண்டியளே!

எங்கட இனத்தவனை... எங்கட சொந்தச் சகோதரங்களை... உறவினர்களை.. அண்டை அயலானுகளை நேசிக்கத் தெரியாத எங்களுக்கு இன்னொரு இனத்தவனைப் பாத்து சுட்டு விரல் நீட்டுறதுக்கு உரிமையில்லைப் பாருங்கோ!

உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" எண்டு இயேசு சொன்ன சத்தியவாக்கு இண்டைக்கு எங்கட இனத்துக்குள்ள செத்துப் புதைஞ்சு போய்க்கிடக்குது.

இப்ப ரண்டு வருசத்துக்கு முன்னம் வன்னியில நடந்த போருக்குப்பிறகும் நாங்கள் இன்னமும் திருந்தேல்லை இப்பவும் ஆரைச் சாகடிக்கலாம்... எவன்ர பொருள் பண்டங்களை அம்பாளிக்கலாம்... கள்ள உறுதி முடிச்சுக் காணியளை அபகரிக்கலாம்... எண்ட சிந்தனையள் தான் எங்களுக்குள்ள பரவிக்கிடக்குது.

வாழ்க்கையில அடிக்குமேல அடி விழுந்தும் நாங்கள் எங்கட 'அடங்காப்பிடாரி'த்தனத்திலயிருந்து இம்மியளவும் அசையேல்லை எண்டது உண்மைதான் இந்த உண்மை பலருக்கு கசக்கவும் செய்யும், கடுகடுப்புக் கொள்ளவும் வைக்கும் எண்டதும் எனக்குத் தெரிஞ்ச உண்மைதான்.

இண்டைக்கு நான் ஏன் இதையெல்லாத்தையும் சொல்ல வாறன் எண்டால், வாழ்க்கையில பட்டுக் களைச்சும் பலபேருக்குப் புத்தி தெளியேல்லையெண்ட கவலையில தான் சொல்ல வாறன்.

ஊருக்கு மீள்குடியேற்றமெண்டு வந்து அவனவன் தங்கட வேலி விராயளைத் துப்புரவாக்கிற சாட்டில, அடுத்தவன்ர காணி நிலத்தை அபகரிக்கிறதிலையும் ஆக்கிரமிக்கிறதிலையும் தான் தன்ர கவனத்தைச் செலுத்துறாங்கள்.

செத்துச் சீரழிஞ்சு... சிங்கள ஆமியிட்டை 'சரண்டர்' ஆகி... பிறகு மீள்குடியேற்றம் எண்டுவந்து இப்ப அடுத்தவன்ர நிலத்தை ஆக்கிரமிக்க வெளிக்கிட்டிருக்கிறம்.

என்ர வீட்டுப்பக்கம் நடந்த கேவலங்கெட்ட செய்கை இது. வெளியில சொல்லிப்போடாதையுங்கோ வேற்று இனத்தவன் அறிஞ்சா விழுந்து... விழுந்து சிரிப்பான்.

என்ன பிரச்சினையெண்டால், ஒரு வீட்டுக்காரன் தன்ர வளவைத் துப்புரவாக்கிப்போட்டு எல்லை வேலியில நிண்ட பால்கிளுவை மரத்தில கதியாலுகளை வெட்டி திரும்ப அந்த எல்லையில போடடேக்கை ஒவ்வொரு அங்குலம் முன்னுக்குத் தள்ளி அடுத்தவன்ர நிலப்பரப்பை விழுங்கிப்போட்டான். காணிக்காரன் இதைப் பாத்திட்டு ஒண்டும் பேசேல்லை. அவனுக்கு குடும்பத்தில பெரிய இழப்பு உறவுகள் இல்லையாம் உந்த நிலம் என்னத்துக்கு...? எண்டு பேசாமல் இருந்திட்டான் போல கிடக்குது. இது உதாரணத்துக்கு ஒண்டு என்பதை அறியுங்கோ!

நான் இப்ப திரும்பவும் பழைய இடத்துக்கு வாறன்...

சொந்த இனத்வன்ர காணியை நீ பால் கிளுவைக்கதியால் போட்டு அங்குலம் அங்குலமாக அபகரிக்கிற உனக்கு, சிங்களவன் எங்கட நிலத்தை அபகரிக்கிறான்.. அவனை அடிச்சு விரட்ட வேணும் எண்டு (இன) வாதம் பேச என்ன உரிமை கிடக்குது உனக்கு சொல்லுபாப்பம்?

முதலில உன்னைத் திருத்திக்கொண்டு... உனக்குள்ள ஒற்றுமையை வளத்துக்கொண்டு... அயலவனை நேசிக்கத் தெரிந்து... அன்புணர்வோடை வாழப் பழகினாப் பிறகல்லோ உனக்கு உரிமை கேட்கிறதுக்கு உரிமையிருக்குது.

என்ர மனசைப் போட்டு உறுத்தின விசயம் இது. அவிட்டுக் கொட்டினதில மனப்பாரம் கொஞ்சம் குறைஞ்சமாதிரிக் கிடக்குது. முதல்ல நாங்கள் எங்களைத் திருத்திக்கொண்டு மற்றவையை திருத்த வெளிக்கிடுவம். நான் இப்பிடிச் சொல்லிப் போட்டனெண்டு தூத்தரியாதையுங்கோ... 'துரோகி' யெண்டும் முத்திரை குத்திப் போடதையுங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# யாமறியும் மொழிகள்

ஆங்கிலம் இன்று உலகெங்கும் பரவி இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் சில வரலாற்று நிகழ்வுகளே அன்றி, அதற்கென்று இருக்கிற எவ்விதமான தனித்தன்மையும் அல்ல என்று டேவிட் கிறிஸ்டல் என்பவர் சொல்கிறார். இது நியாயமான பேச்சாகத்தான் தெரிகிறது.

ஆனால் இதன் மாற்றுப் பார்வையாக, ரொபர்ட் மெக்ரம் என்பவர் அண்மையில் Globish என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். கற்பதற்கு எளிதாக இருக்கிறது, பொதுவாக எல்லாருக்கும், எல்லாவற்றுக்கும் பொருத்தமான சொற்களைக் கொண்டிருக்கிறது, நெறியான மொழி, கற்பனையைத் தூண்டும் மொழி, மற்ற மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துத் தன்வயபபடுத்திக் கொள்ளும் தன்மை கொண்டது - இவை எல்லாம் ஆங்கிலத்தின் பெருஞ்சிறப்பு என்று அவர் சொல்கிறார். இதனால் உலக மொழியாவதற்கு அதற்குத் தனித் தகுதி இருக்கிறதாம். இதனால்தான் ஆங்கிலம் அறிவிக்கப்படாத உலகப் பொது மொழியாகவும் இருகிறது என்கிறார் அவர்.

தமிழ் தொன்மையான மொழி என்பதிலோ, அதன் மொழி வளத்திலோ யாருக்கும் ஐயம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், அது குறித்து, 'எனது மொழியே உலகின் முதன்மையான மொழி' என்ற உணர்வு பலரிடமும் உள்ளது. விளையாட்டாக கூகுளைத் தட்டிப் பார்த்தால் பல்வேறு மொழியினரும் தங்கள் மொழியைக் குறித்ததொரு பெருமிதத்தில் இருப்பது தெரிகிறது. தங்கள் மொழி ஏதோ ஒரு வகையில் தனித்தன்மை உடையதாக இருக்கிறதென்று சொல்லிக் கொள்கிறார்கள். பிற மொழிகளைக் காட்டிலும் தங்கள் மொழி ஏதோவொரு விதத்தில் உயர்ந்தது என்று நினைக்கிறார்கள். மொழி தொடர்பான இவ்வித எணணங்கள் வேடிக்கையாக இருக்கின்றன.

எல்லா மொழிகளும் ஒவ்வொரு வகையில் தமக்கெனத் தனிச் சிறப்புடையனவே. பேசப்படும் வட்டாரத்தின் தேவைகளுக்கேற்ப அது புதுப் புதுச் சொற்களைப் படைத்து வாழ்வு காண்கிறது.

உதாரணத்துக்கு, வட அவுஸ்ரேலியாவில் உள்ள Kuuk Thaayorre என்ற பூர்வகுடிகளை எடுத்துக் கொள்வோம். அவர்களிடையே பக்கபட்சம் இல்லை - இடம் வலம், முன்னே பின்னே என்பன கிடையாது - எல்லாம் திசைகள்தான்: ஒருவர் நிற்கிற திசையை வைத்து 'உனது தென்மேற்கு காலில் ஒரு தேள் இருக்கிறது பார்!' என்பார்கள், அல்லது 'உன் வடமேற்கு திசையில்". அதே தேள் அவனுக்குப் பின்புறம் நின்று கொண்டிருந்தால், நம்மைப் போல் 'உன் பின்னால் ஒரு தேள் இருக்கிறது,' என்று அவர்கள் சொல்வதில்லை. அவர் நிற்கிற திசையைப் பொறுத்து, 'உனக்குக் கிழக்கில்" அல்லது 'உனக்கு வடக்கில் ஒரு தேள் இருக்கிறது' என்கிறார்கள். 'எங்கே போகிறாய்?' என்று கேட்டால் கூட சரியான பதில் கிடையாது: 'தென்தென்மேற்கு திசையில் கொஞ்சத் தூரம்". திசைகள் விஷயத்தில் அவர்கள் துல்லியமாக இருப்பதால் அவர்கள் எந்த இடத்திலும் வழி தவறி தடுமாறுவதே கிடையாது. திசைகளைக குறித்த அறிவு அவர்களுக்கு வலது கை மாதிரி.

கூக் தாயோர்தான் திசை விடயததில் அப்படி என்றால் சீனாவில் இருக்கிற மாண்டரின் மொழி பேசுபவர்கள் வேறு வகை. நமக்கு கடந்த காலம் பின்னால் இருக்கிறது, எதிர் காலம் முன்னால் இருக்கிறது, இல்லையா? அவர்களுக்கு எல்லாம் தலைகீழ். அவர்களது காலம் உடலை நீத்த உயிர் போல் கீழேயிருந்து மேலே போகிறது - அடுத்த மாசம் என்று நாம சொன்னால், அவர்கள் கீழ் மாசம் என்று சொல்வார்கள். போன மாசம் மேல் மாசமாம். இந்த எடுத்துக்காட்டின்படி பார்த்தால் அவர்களுடைய காலம் மேலிருந்து கீழிறங்குகிறது இல்லையா?

'அவன் ஒரு புத்தகத்தைப் படித்தான்,' என்று நாம் சுலபமாக சொல்லிவிட்டுப் போய் விடுகிறோம். இதுவே ரஷ்யர்களாக இருந்தால், பாதியில் முடித்த புத்தகத்துக்கு வேறு 'படித்தான்' வரும், முழுசாக படித்து முடித்த புத்தகத்துக்கு வேறு 'படித்தான்' வரும். டர்கிஷ் மொழியில் இன்னும் மோசம்- 'அவன் ஒரு புத்தகத்தைப் படித்தான்,' என்று நீங்கள் சுருக்கமாக சொல்லிவிட முடியாது. 'அவன் ஒரு புத்தகத்தைப் படித்ததைப் பார்த்தேன்,' 'அவன் ஒரு புத்தகத்தைப் படித்ததாகக் கேள்விபட்டேன்,' என்று ஒரு முழு நேர நிருபரைப் போல உங்களுக்குத் தகவல் கிடைத்த விதத்தையும் சொல்லியாக வேண்டும்.

**எனக்கும் தமிழ்தான் மூச்சு ஆனால்**
**அதைப் பிறர்மீது விடமாட்டேன்**
**- ஞானக்கூத்தன்**

மொழிகள் தாமறியும் பாதையில் தனித்துச் செல்வதில்லை: அதன் பயனீட்டாளர்களாகிய நம்மையும் தம்மோடு துணைக்கழைத்துச் செல்கின்றன: மொழியோடு இயைந்த வாழ்வுக்கு நாம் கொடுக்கும் விலை நம் அறிவு. ஆமாம் மனமொத்த தம்பதியரைப் போல் சில நியாயங்களை மனமறியாத மாதிரி மறைத்துத்தான் வாழ வேண்டி இருக்கிறது. எப்படி என்கிறீர்களா?

கிரேக்கர்களும் ஆங்கிலேயர்களும் தம் மொழிக்காக செய்கிற தியாகத்தைப் பாருங்கள்-. ஆங்கிலம் பேசுபவர்கள் 'அது ஒரு குறுகிய கால்வாய்,' 'இது ஒரு நீண்ட பாலம்,' என்றெல்லாம் சொல்கிறார்கள், இல்லையா? கிரேக்கர்கள், 'அது ஒரு சிறிய கால்வாய்,' 'இது ஒரு பெரிய பாலம்,' என்றுதான் சொல்கிறார்கள் (இந்த விஷயத்தில் தமிழர்களாகிய நாம் எழுத்தில் ஆங்கிலேயர்களாகவும் பேச்சில் கிரேக்கர்களாகவும் இருக்கிறோம்.).

மொழி வேறு மனம் வேறு என்று நாம் நினைக்கிறோம்: ஆனால் அது விவாதத்துக்குரிய விஷயமாகி விட்டது. நாம் பேசும் மொழி, அத்தோடு நின்று விடாமல் நமக்காகப் பேசுகிறது. எதை எப்படிப் பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது என்றுகூட சொல்லலாம்.

உதாரணமாக ஸ்பானி' மொழியில் சாவிக்குப் பெண்பால் தந்திருக்கிறார்கள். அவர்களிடம் சாவியை விவரிக்கும் சொற்கள் என்னென்ன என்று கேட்டால், 'பொன்னானது' 'நளினமானது' 'சிறியது' 'அழகானது' 'பளபளப்பானது' என்ற சொற்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் சாவியை ஆணாய்ப் பார்க்கும் ஜெர்மானியர்களோ, அது குறித்து, 'கரடுமுரடானது' 'உலோகத்தாலானது' 'பயனுள்ளது' 'கனமானது' என்றெல்லாம் சொல்கிறார்கள். சாதாரண சாவி கூட மொழியின் காரணமாக எப்படி வெவ்வேறு குறியீடுகளாக மாறுகிறது பாருங்கள்.

சாவியை விடுங்கள் சிறிய பொருள். பாலத்துக்கு வாருங்கள். சாவியை ஆணாய்ப் பார்க்கும் ஜெர்மானியர்களுக்கு பாலம் ஒரு பெண் போல் - பாலத்தை 'அழ்கியது' 'நளினமானது' 'மென்மையானது' 'சன்னமானது' என்றெல்லாம் கவிஞர்களாக மாறி வர்ணிக்கிறார்கள் அவர்கள். ஆனால் அதே பாலமோ ஸ்பானி' மொழி பேசுபவர்களின் பார்வையில் ஒரு ஆணாகமாறி பேராண்மைக் கோலம் பூண்கிறது - 'பெரியது', 'நீண்டது', 'வலுவானது', 'உயர்ந்தது', 'ஆபத்தானது' என்பனவற்றைப் பாலத்தைக் குறிக்கும் இணைச் சொற்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

ஸ்பெயின்காரர்களுக்கு நளினமாயிருக்கும் சாவி ஜெர்மானியர்களுக்கு கரடுமுரடானதாகத் தோற்றமளிக்கும் மொழி விளையாட்டை வியப்பதன்றி நாம் என்ன செய்ய முடியும்? இதில் எது மேன்மையானது என்று கேட்டால், அந்தக் கேள்வியே அபத்தமாகத் தோன்றுகிறது அல்லவா?

மொழி என்பது நம் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், காசு கொடுத்துப் பொருள் வாங்குகிற மாதிரி, எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதற்காக மட்டும் மொழியைப் பயன்படுத்துகிறோமா என்றால், இல்லை. நம்மை அறியாமல் மொழி நம் மூளையை மயக்குகிறது. நம் மனப்போக்கையும் மாற்ற வல்லதாக இருக்கிறது.

அரபி மற்றும் ஹீப்ரு தெரிந்த இஸ்ரேலிய அரேபியர்களை வைத்து ஒரு சோதனை செய்திருக்கிறார்கள். அந்த ஆய்வாளர்கள் என்ன சொல்கிறாரகள் தெரியுமா? அரேபிய மொழியில் சோதனையை செய்யும்போது ஏறத்தாழ எல்லா அரேபியர்களும் நல்லவரகள், பெரும்பான்மையான இஸ்ரேலியர்கள் கெட்டவர்கள் என்ற கண்ணோடடத்தை வெளிப்படுத்துகிறார்கள். அதே சோதனை ஹீப்ரு மொழியில் நடத்தப்படும்போது அரேபியர்கள்தான் நல்லவர்கள், இஸ்ரேலியர்கள் கெட்டவர்கள் என்ற நிலையை அவ்வளவு தீவிரமாக எடுக்கவில்லையாம். நாம் என்ன மொழி பேசுகிறோம் என்பது நம் விருப்பு வெறுப்புகளையும் மாற்றுவதாக இருக்கிறது!

பேசும் மொழிகள் மட்டுமல்ல, உவம உவமேயங்களும்கூட நம் மனநிலையோடு உடலமைப்பையும் மாற்றியமைககின்றன. கடந்த காலத்தைப் பற்றி நினைப்பவர்கள் நினைவோடையின் போக்கையொட்டி பின்னோக்கிச் சாய்கிறார்கள் எதிர்காலத்தை சிந்திப்பவர்கள் சிந்திக்கும்போதில் முன்னோககிச் சாய்கிறார்கள். கைகழுவும்போது நம் மனதிலிருக்கும் குற்ற உணர்வும் நீங்குகிறது. கனமான விஷயங்கள் சுமையாகின்றன: அதிக எடையைக்கையில் வைத்திருப்பவர்கள் தீவிரமாக சிந்திக்கிறார்கள். தீவிரமான புத்தகங்கள் எடை கூடியனவாக உணரப்படுகின்றன.

மொழி, சிந்தையையையும் உலகையும் நம்மையும் நாம் காணும் பார்வையைத் தீர்மானிக்கிறது என்ற கோட்பாட்டுக்கு Sapir-Whorf hypothesis என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அண்மையில் வெளிவந்துள்ள ஒரு ஆய்வின் முடிவுகள் இதை உறுதி செய்யும வகையில் உள்ளன - பேசும் மொழிகள் தான் என்றில்லை - சைகை மொழியும் கூட உலகை நாமறியும் வகையை, உலகில் நாமியங்கும் முறையை பெருமளவில் தீர்மானம் செய்கின்றன.


1970களில் நிகராகுவாவிலிருந்த பேச இயலாச் சிறுவர்கள் சிறப்புப் பள்ளிகளில் படிக்கையில் தாமாகவே ஒரு சைகை மொழியைக் கண்டுபிடித்தார்கள். இது காலப்போக்கில் மற்ற மொழிகளைப் போல் வளர்ந்தது. இம்மொழியின் வளர்ச்சியும் இயல்பும் மொழியியல் வல்லுனர்களின் ஆய்வுக்கு இப்போது ஒரு அரிய வாய்ப்பைத் தந்திருக்கிறது.

தொடக்க காலகட்டங்களில் இம்மொழியில் இடம் வலம் என்ற சொற்களுக்கான தகுந்த குறியீடுகள் இல்லை. பத்து வருடங்களில் இச்சிறுவர்கள் இடம்-வலம் இவற்றைக் குறிக்கும் சமிக்ஞைகளைக் கண்டுபிடித்து விட்டார்கள். ஆச்சரியம் என்னவென்றால் இடம் வலம் என்ற சொற்களை அறியாமல் வளர்ந்த குழந்தைகளுக்கும் அறிந்து வளர்ந்த குழந்தைகளுக்கும் இடையே பிற்காலத்தில் ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகிறது:

இவர்களின் கண் முன்னரே ஒரு அறையில் ஒரு பொருளை ஒளித்து வைத்து விட்டு இவர்கள் கண்ணைக் கட்டி சுற்றி விடப்பட்டார்கள். இடம் வலம் என்ற சொற்களை அறியாது வளர்ந்தவர்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பொருளைக் கண்டுபிடிக்க மிகவும் தடுமாறினார்கள். இத்தனைக்கும் அவர்கள் தற்போது இந்த சொற்களைப் பயன்படுத்துபவர்கள். ஆனால் கல்விப பருவத்திலேயே இந்தச் சொற்களுக்கான குறிகளைக் கற்றுத் தேர்ந்த, இவர்களைவிட பத்து வயதே இளையவர்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை: அறையில் இருக்கிற பொருட்களை வழிகாட்டிகளாக வைத்துக் கொண்டு (மேசைக்கு இடப்பக்கம் ஒளித்து வைத்திருக்கிறார்கள்) மிக எளிதாக ம[illegible]த்து வைத்த பொருளைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

மொழி நமக்கு மூச்சு என்கிறோம். தப்பில்லை, அது நமது பேச்சாக மட்டுமில்லாமல் பார்வையாகவும் இருக்கிறது. எனக்கு எப்படி தமிழோ அதுபோல ஒவ்வொருத்தருக்கும் தத்தமது மொழி அமைந்துள்ளது. என் தாயின் உயர்வை நான் நினைவுகூரும்போது மற்றவர்களின் தாய்மார்களோடு அவரை ஒப்பிடவோ அல்லது அவர்களை தாழ்த்திப் பேச வேண்டிய தேவையோ எனக்கு இல்லை. சொல்லப்போனால், பொதுவாகத் தாய்மை குறித்த என் எண்ணம் எதுவோ அதுவே என் தாய்க்கு நான் செலுத்தும் மரியாதை.

அது போலவே மொழியும். காலத்தால் முற்பட்டதாக இருக்கலாம், உலகில் மிக அதிக பேர் பேசுவதாக இருக்கலாம், மற்ற மொழிகளில் சொல்லப்பட முடியாததை சொல்லும் திறன் கொண்டதாக இருக்கலாம், சிறந்த இலக்கியங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம், அல்லது பூர்வகுடிகள் என்று சொல்கிறோமே அவர்களது தாத்தன் முப்பாட்டன் காலத்திலிருந்து வழி வழியாக வந்த, எழுத்து வடிவமே இல்லாத, அழிந்து கொண்டிருக்கும் மொழிகளில் ஒன்றாக இருக்கலாம் - எப்படி இருந்தாலும் எல்லா மொழிகளும் மானிடர்களாகிய நமக்கு உரியனவே. இவை அனைத்தும் நம் மரியாதைக்குத் தக்கனவே. இவற்றில் உயர்வு தாழ்வு பாராட்டுவது நம் பகுப்புணர்வைக் காட்டுமே அன்றி பகுத்தறிவைக் காட்டாது.



- மித்திலன்

### கூட்டமைப்புடனான...

படைத்தரப்பினரை நிலைகொள்ள வைக்கும் நடவடிக்கையி லேயே முனைப்பைக் காட்டிவருகின்றது. படைத்தரப்பின் இராணுவ நிலைகளை நிரந்தரமாக உருவாக்குவது, அவர்களுக்கான முகவர் களை உருவாக்குவது, படைத்தரப்பினருக்கான குடியிருப்புக்களை உருவாக்குவது போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் முப்பது சதவீதம் சிங்கள மக்களை குடியேற்றவேண்டும் என்ற கொள்கையின் அடிப் படையில் தான் இலங்கை அரசாங்கம் இயங்கிவருகின்றது.

இந்நிலையில் தான் சர்வதேசத்தினால் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அரசாங்கம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரில் விடுதலைப் புலி கள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்தப் போராட்டம் தமிழ மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத் தியது.

இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் சரிசமமாக நடத்தப்படவில்லை. அவர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். அந்த மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை. அரசாங்கம் அதற்கான ஏற பாட்டைச் செய்யவேண்டும் என சர்வதேசம் கூறும் அளவுக்கு நிலை மைகள் மாறியுள்ளன.

அத்துடன், அரசாங்கத்தின் இராணுவ மயப்படுத்தும் திட்டத்தை அறிந்துகொண்ட சர்வதேசம், சட்டம் ஒழுங்குகளை பொலிஸாரே கவனிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, அரசாங்கத்துக்கு பாரிய நெருக்குதல்கள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் தன்னைப் பாதுகாக்க, ஜனாதிபதி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, கோத்தபாய ராஜபக்ஷ தன்னை பாதுகாத்துக்கொள்ள, ஏன் ராஜபக்ஷ குடும்பத்தையே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் நிச்சயம் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியது மாத்திரமல்ல, தமிழ் மக்களுடைய உரிமைகளைக் கொடு க்க் வேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்படும் நிலை வந்துள்ளது.

ஒரு பக்கத்தில் பேச்சுவார்த்தை என்று சொல்லிக்கொண்டு மறு பக்கத்தில் முழுத்தமிழ் சமுதாயத்தையும் குழித்தோண்டிப் புதைக்கும் வேலையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இவ்வாறானவர்களுடன் தான் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம் என உரையாற்றினார் சுரேஷ பிரேமச்சந்திரன்.

### வீட்டுத்திட்டத்தை...

பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் அவர் களுக்குரிய பெயர்கள் வீட்டுத்திட்டத்தில் இருந்து நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப் படும் உதவித் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திப் பயன் பெறவேண்டும். உதவித்திட்டங்கள் உரியவர்களுக்குக் கிடைக்க விடாது தடுத்து நிறுத்தி சிலர் அவற்றைப் பெற்று துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# லண்டனிலும் குதிரையோட்டம் இலங்கைப் பெண்ணுக்கு 6 மாத சிறை

லண்டனில் மூன்று வருடங்க ளின்முன் தனது குடியேற்ற பரீட் சையினை எழுதுவதற்கு சட்ட விரோதமாக வேறொரு ஆணை அனுப்பிவைத்த இலங்கைப் பெண் ஒரு வருக்கு சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோசடிக்கு துணை போன ஆணுக்கும் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரெஜினோல்ட் அந்தோனி என்ற குறித்த ஆண் இவ்வாறு பரீட்சை களுக்கு தோற்ற பயன்படுத்திய 40 போலி சாரதி அனுமதிப் பத்தி ரத்தையும் அதிகாரிகளிடம் கைய ளித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறு குறி த்த நபரை சட்டவிரோதமாக பரீட்சை எழுதி அனுப்பிவைத்த பெண் கிரு ஷ்ணதேவி தம்பிராஜா என இனங் காணப்பட்டுள்ளார்.

குடிவரவு திணைக்கள அதி காரிகள் குறித்த பெண்ணின் வீட் டுக்கு நேரில் சென்று அவருடன் ஆங்கிலத்தில் கதைக்க முற்பட்ட போது அவரது கணவர் அவரு க்கு அதனை மொழி பெயர்த்து கூறியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண பரீட்சை எழுதியிருக்க வாய்ப் பில்லை என சந்தேகித்த எல்லைப் பாதுகாப்பு முகவர் அமைப்பு, தொடர்ந்து நடத்திய விசாரணை கள் மூலம் பரீட்சை க்கு சமர்ப் பித்த சாரதி அனுமதி அட்டை போலியானது என கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் தொடர்ந்து விடுமுறையை கழிக்க கோருப வர்களுக்கு மிகவும் அத்தியாவசி யமான பரீட்சையிலேயே குறித்த பெண் இவ்வாறான மோசடி யினை செய்துள்ளார்.

### பொதுமக்கள்...

இடையே புரிந்துணர்வை நம்பிக்கையை ஏற்படுத்துவதே நோக்க மென்றும் முக்கியமாக சமூகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சி னைகளுக்கும் தீர்வுகாணக் கூடியதொரு சூழலை இக்குழு மூலம் ஏற்படுத்த முடியும்.

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் சாதி, மத, அரசியல் வேறு பாடின்றி இக்குழு அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக்குழுக்களில் மூத்த அமைச்சர்கள், நகர, மாநகர முதல்வர்கள், தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், மத குருமார்கள், கல்வித்துறை சார்ந்தோர், அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டோ ரும் உள்ளடக்கப்படுவர் சிவில் நிர்வாகத்தை பாதுகாப்பதன் மூலமே சமூகத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க முடியும் இதற்கு பொதுமக்க ளுடைய ஆதரவும் பங்களிப்பும் ஒத்தாசையும் முக்கியமானது. சகல ரும் சுதந்திரமான கருத்துக்களை வெளிக்கொணர முன்வரவேண் டும். குழு தொடர்பிலான படிவங்கள் சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாவனைக்குட்படுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.


இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெ ன்ரின் (உதயன்) யாழ் அர்ச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த மற்றும் மதத் தலைவர்கள் உள் ளிட்டோருடன் பிரதேச செயலாளர்கள் பிரதேச சபை செயலாளர் களும் உடனிருந்தனர்.

### உத்தியோகபூர்வ...

யோகஸ்தர்கள் பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதி பெற்றே தனது வாகனத்தை செலுத்தியதாகவும் வாகனங்கள் போன்ற வச திகள் நாடாளுமன்றத்தால் வழங் கப்பட்டதாகவும் ரணில் கூறினார். தனக்கு ஜனாதிபதி அலுவலகத் தினால் ஒரேயொரு வாகனம் மாத் திரமே வழங்கப்பட்டதாகவும் அது அடிக்கடி பழுதடைந்து கராஜுக்கு போவதும் வருவதுமாக இருப்பதா கவும் அந்த வாகனத்தை திருப் பிக்கொடுத்துவிட்டு உத்தியோக பூர்வ முச்சக்கர வாகன மொன் றைப்பெற விரும்புவதாகவும் ரணில் மேலும் கூறினார்.

உத்தியோகபூர்வ முச்சக்கர வாகனத்தை வழங்காவிட்டால் தன க்கு அவசியமான வாகன வசதி களை வழங்குமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கோரி னார். அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபா நாயகர் சந்திம வீரகொடி, எதிர்க் கட்சித் தலைவருக்கு உரித்தான அனைத்து வசதிகளும் வழங் கப்படும் எனத் உறுதியளித்தார்.

# மரண அறிவித்தல்



## குமாரசாமி சுந்தரமூர்த்தி

காரைநகர் களபூமி சத்திறைந்தைப் பிறப்பிடமாகவும், கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏ.எஸ்.குமாரசாமி அன்கோ, கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரான குமாரசாமி சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (07.10.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செந்தில்நாயகியின் கணவரும், பாக்கியத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தேவராணி, நடேசன், பத்மநாதன், சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருண கிரிநாதன் (ஏ.எஸ்.குமாரசாமி அன் கோ உரிமையாளர், கம்பளை) தேவகுஞ்சரி, இராசகுமாரி, கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கம்பளை) சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்) சிவயோகன் (ஏ.எஸ்.குமாரசாமி அன் கோ, கம்பளை) சுரேந்திரன் (கிருஸ்ணா நகை மாளிகை உரிமையாளர், யாழ்ப்பாணம்) சொர்ணதேவி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், சிவதர்சினி, சாளினி, தர்சிகா, மயூரன், சுதன், தனுஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (09.10.2011) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கம்பளை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முகவரி :
113/6, கண்டிவீதி, கம்பளை.
தொ.பே - 0812351201

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/590)

# மூன்று ஆபிரிக்கப் பெண்களுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு



(சுவீடன்)

ஆபிரிக்க நாடொன்றில் முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட லைபீரிய ஜனாதிபதி Ellen Johnson Sirleaf அதே நாட்டைச் சேர்ந்த Leymah Gbowee மற்றும் யெமன் நாட்டைச் சேர்ந்த Tawakkul Karman ஆகியோருக்கே இவ்வாண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள் பாதுகாப்பு, பெணகளின் உரிமை மற்றும் சமாதானத்துக்காக அகிம்சை வழியில் இம்மூவரும் தொடர்ச்சியாகப் போராடி வருவதற்காக இம்மூவருக்கும் இப்பரிசு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய லைபீரியாவில் பிறந்த Leymah Gbowee ஆறு குழந்தைகளின் தாயாராவார். இவர் லைபீரியப் பெண்களைத் திரட்டி அமைதி இயக்கத்தை ஆரம்பித்து, அதன் ஊடாக பெண்களின உரிமைக்காக அகிம்சை வழியில் பல்வேறு போராட்டங்களை தலைமையேற்று நடத்தியுள்ளார்.

யெமன் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியான Tawak kul Karman ஒரு தீவிர மனிதவுரிமை செயற்பாட்டாளராக இருப்பதுடன், பெண் பத்திரிகையாளர்கள் அமைப்பின் தலைவராகவும் பணிபுரிகின்றார். யெமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சாலேவுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி பல தடவைகள் சிறை சென்ற அவர், ஊடக சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்துக்காகவும் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்.

இம்மூவருக்குமான சமாதானதுக்கான நோபல் பரிசை அறிவித்த இப்பரிசுக்குழுவின் தலைவர் துர்பியோன் ஜாக்லான்ட், சமுதாயத்தில் ஆண்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பெண்களுக்கு கிடைக்கின்ற வரை உலகில் நிலையான சமாதானத்தையும், ஜனநாயத்தையும் ஏற்படுத்த முடியாது எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# தங்கம் கடத்திய எண்மர் சென்னையில் பிடிபட்டனர்

இலங்கையிலிருந்து 2 கிலோ எடை கொண்ட தங்க நகைகளை கடத்தி வந்த 8 பேர் கொண்ட கும்பலை சென்னை விமான நிலையத்தில் அதிகாரிகள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இலங்கையிலிருந்து பெருமளவில் தங்கம் கடத்தி வரப்படுதாக சென்னை விமான நிலைய அதிகாரிகளுக்குத் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, இலங்கையிலிருந்து நேற்றுச் சென்ற வரும் விமானங்களில் பயணிக்கும் பயணிகளை தீவிர பரிசோதனை நடத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன்பிரகாரம் நேற்று அதிகாலை முதலே கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. அதிகாலையில் ஜெட் ஏர்வேஸ் விமானம் ஒன்று, கொழும்பிலிருந்து வந்தது. அதில் வந்த பயணிகளை அதிகாரிகள் தீவிரமாக சோதனையிட்டனர். அப்போது பிரஷ்தாப எட்டு பேர் மீது சந்தேகம் வந்தது.

இதையடுத்து அவர்களை அதிகாரிகள் தனியாக அழைத்துச் சென்றனர். கிட்டத்தட்ட 2 மணி நேரம் நடந்த விசாரணையின் போது அவர்கள் உருப்படியான தகவலைக் கூறாமல் இழுத்தடித்து வந்தனர். இதையடுத்து அவர்களை முறைப்படி அதிகாரிகள் விசாரித்ததிலேயே உண்மை தெரியவந்துள்ளது.

# சர்வதேசத்தின் நியாயமற்ற கருத்து ஒருபோதும் அடிபணியமாட்டோம்

(களனி)



இலங்கை குறித்து சர்வதேசம் நியாயமற்ற கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. எனினும் இந்த நியாயமற்ற கருத்துக்களால் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனியில் இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற அடிப்படையில் பல சவால்கள், இன்னல்களுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும். எனவே இந்த சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூன்றாம் கட்டம் இன்று

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூன்றாம் கட்டம் இன்று நடைபெறுகிறது. 17 மாநகர சபைகள், ஒரு நகர சபை, மற்றும் 5 பிரதேச சபைகள் என மொத்தமாக 23 உள்ளூராட்சி சபைகளுக்கு 420 பேரைத் தெரிவு செய்வதற்கு 26 அரசியல் கட்சிகள் மற்றும் 104 சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 6,448 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்காக 1,167 வாக்களிப்பு நிலையங்களில் 15 லட்சத்து 89 ஆயிரத்து 622 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முன்னதாக, மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் கட்டம் கட்டமாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இப்போது நடத்தப்படும் மூன்றாவது கட்டத்தில் தான் பெரிதும் எதிர்பார்க்கப்படும் கொழும்பு மாநகரசபை தேர்தலும் நாளை நடைபெறுகின்றது.

கொழும்பில் ஆளும் பிரதான சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான அணியும், பிரதான எதிரணியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஏஜெஎம் முஸம்மில் தலைமையிலான அணியும் போட்டியிடும் இந்தத் தேர்தலில் தமிழ் கட்சியான மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி இன்னொரு அணியாக போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் சுமார் 22 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# உளவுப் பணியில் ஈடுபட்ட 300 பேர் குறித்து விசாரணை

(கொழும்பு)

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பில் இலங்கையில் உளவுப் பணியில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்காக 300 இலங்கையர்கள் இவ்வாறு உளவுப் பணிகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தின் பணிப்புரைக்கு அமைய குறித்த நபர்கள் உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக போலி போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொய்யான தகவல்களை இவர்களே வழங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

300 பேரைக் கொண்ட இந்தக் குழு செய்மதித் தொலைபேசி ஊடாக நோர்வே நாட்டில் கடமையாற்றிய வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவருக்கு தகவல்களை வழங்கியுள்ளது.

அமெரிக்க இரகசிய ஆவணமொன்றில் குறித்த நபர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மக்கள் சட்டத்தை கையிலெடுப்பதை தவிர்ப்பதற்கு புதிய சட்ட மூலம்

மக்கள் சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவதனை தடுத்து நிறுத்த புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக மக்கள் சட்டத்தை கையிலெடுத்து செயற்பட்டு வருவதாகவும், இதனை தடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மையில் ஆத்திரமுற்ற தொம்பே பிரதேச மக்கள் காவல் நிலையத்தை தாக்கி சேதப்படுத்தினர். இவ்வாறான நடவடிக்கைகள் தற்போது வழமையாகிவிட்டதாகவும், இது ஆபத்தானது எனவும் ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

# மாலைதீவு சார்க் மாநாட்டு பாதுகாப்பு இலங்கையின் சிறப்பு அதிரடிப் படையிடம்

(கொழும்பு)

மாலைதீவின் அட்டு நகரில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள 17 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களுக்கு சிறப்பு அதிரடிப்படைப் பிரிவினரே பாதுகாப்பு வழங்கவுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு கட்டமாக சார்க் மாநாட்டுப் பாதுகாப்புக்காக சிறப்பு அதிரடிபடை கொமாண்டோக்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக இலங்கையின் சிறப்பு அதிரடிப்படையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிறப்பு அதிரடிப்படையினரின் கே-9 காவல் துறை மோப்ப நாய்களும் வெடிபொருட்களை கண்டுபிடிக்கும் பணிக்காக மாலைதீவுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக மாலைதீவு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சார்க் மாநாடு நடைபெறும் இடத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றிலும், பாதுகாப்புப் பணிகளில் இலங்கை சிறப்பு அதிரடிப்படையினருடன் அவர்களின் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சும், தேசிய பாதுகாப்பு படையும் இலங்கை அதிரடிப் படை அங்கு பணியில் அமர்த்தப் படவுள்ள தகவலை உறுதிப் படுத்தியுள்ளன.

## மரண அறிவித்தல்

## கணபதி தில்லையம்பலம் (பொன்னுச்சாமி)

உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த கணபதி தில்லையம்பலம் (பொன்னுச்சாமி) நேற்றுக்காலை காலமானார். இவர் காலம் சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை (பிரமந்தனாறு), தேவகுமார் (ரவி-உடையார்கட்டு) கெங்காதரணி (வரணி), ஜெயக்குமார் (கிளிநொச்சி), கனீந்திரராணி (இத்தாலி) ஜமுனாராணி (உடையார்கட்டு) ஆகியோரின் அன்புத்தந்தையும், மகேஸ்வரி, வசந்தி, விஜயராஜா, கயல்விழி, அருளானந்தம் (இத்தாலி), சுகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு வரணி இடைக்குறிச்சியில் உள்ள அன்னாரது மகளின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வரணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி :
உடையார்கட்டு தெற்கு,
உடையார்கட்டு.

தற்காலிக முகவரி :
இடைக்குறிச்சி, வரணி.
0771118451

## சம்பியன்ஸ் லீக் ருவென்ரி -20

இறுதிக்குள் நுழைந்தது றோயல்

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
எதிர்
நியூ-சவுத்வேல்ஸ்



நியூசவுத்வேல்ஸ் 203/2 (20 ஓவர்) பெங்களூர் றோயல் 204/4 (18.3 ஓவர்) 6 விக்கெட்டால் றோயல் வெற்றி.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர் பீடத்தில் பணியாற்றும் தி.ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர். கணபதி தில்லையம்பலம்**

அவர்கள் 07.10.2011 நேற்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்துக்
கொள்கின்றோம்.

தினமுரசு குடும்பம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.